பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 10 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 15 வியாழக்கிழமை 04.12.2025 கதிர் 026

**இனி இது ரகசியம் அல்ல!**

தற்போது ஏற்பட்டுள்ள பேரிடரை எதிர்கொள்வதற்கு ஆளும்தரப்பு போராடிவருகிறது. ஆட்சிக்குப்புதிதான இந்த ஆளும்தரப்பு இந்தப் பேரிடரை எப்படி எதிர்கொள்ளும் என்கிற ☞2

## குற்றச்சாட்டுக்கள் முற்றிலும் தவறு பிரதி அமைச்சர் அருண பாய்ச்சல்

எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் குறிப்பிடும் குற்றச்சாட்டுக்கள் முற்றிலும் தவறானவை. அரசுத் தலைவர் நாடாளுமன்றத்தில் தேசிய பேரிடர் முகாமைத்துவச் சபையைக் கூட்டி இந்த பேரிடர் பற்றி எடுத்துரைத்து முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து பணிப்புரை வழங்கினார். கடந்த ஜூலையில் அரசுத் தலைவரின் தலைமையில் அரசுத் தலைவர் செயலகத்தில் பேரிடர் முகாமைத்துவ சபை கூடியது .7 ஆண்டுகளுக்கு பின்னரே இந்தச் சபை கூட்டப்பட்டது என்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பெருந்தோட்டத்துறை, சமூக உட்கட்டமைப்பு அமைச்சு, வர்த்தகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதி , திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் ☞6

## பொருள்களின் விலைகளை கூட்டி விற்றால் தண்டனை

### அமைச்சர் அறிவிப்பு

நாடு எதிர்கொண்டுள்ள மிக மோசமான நெருக்கடிக்கு மத்தியில் அதிக விலைக்கு உணவு பொருட்களை விற்பனை செய்தால்கடுமையானசட்டநடவடிக்கைஎடுக்கப்படும். அதற்குரிய ஆலோசனைகள் உரிய தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று கிராமிய அபிவிருத்தி மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் ☞6

## பேரிடர் முன்னெச்சரிக்கை குறித்து விசாரணை நடத்த குழு அமைக்குக

### முஜிபுர் ரஹ்மான் எம்.பி. கோரிக்கை

**பேரிடர் தொடர்பில் ஆளும்தரப்புக்கு முன்கூட்டியே அறிவிக்கப்பட்டு, அது தொடர்பில் ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கவில்லையா அல்லது ஆளும்தரப்புக்கு அது தொடர்பில் அறிவிக்கப்படவில்லையா என அறிந்து கொள்ளும் உரிமை நாட்டு மக்களுக்கு இருக்கிறது. அதனால் இதுதொடர்பில் நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்றை அமைத்து விசாரணை மேற்கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.**

**நாடாளுமன்றத்தில் நேற்று பெருந்தோட்டமற்றும்சமூகஉட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு, வர்த்தக வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு மற்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:**

**நாட்டில் ஏற்பட்டுள்ள பேரிடர் தொடர்பில் சர்வதேச ஊடகங்கள், வளிமண்டலவியல் திணைக்களம் போன்ற அமைப்புகளால் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டு, அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க ஆளும்தரப்பு தவறியுள்ளதாக பல்வேறு தரப்பினரும் தெரிவித்து வருகின்றனர். அதனால் உண்மையில் ஆளும்தரப்பு இதனை அறிந்திருந்ததா இல்லையா? அல்லது அந்தப் பேரிடர் தொடர்பில் காலநிலை அவதான நிலையம் ஆளும்தரப்புக்கு அறிவுறுத்தி இருந்ததா இல்லையா என ஆளும்தரப்பு இதுவரை முறையான பதில் ஒன்றை வழங்கவில்லை.** ☞2

## உயிரிழப்பு எண்ணிக்கை நேற்று 479ஐ எட்டியது

நாட்டின் பல பகுதிகளிலும் தித்வா புயலால் ஏற்பட்ட பாரிய மண்சரிவுகள் மற்றும் வெள்ளம் காரணமாக 16 இலட்சத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, சுமார் 44 000 வீடுகள் சேதமடைந்துள்ளன. நேற்று புதன்கிழமை இரவு வரையான நிலைவரத்தின் அடிப்படையில் 479 பேர் உயிரிழந்துள்ளதோடு, 350 பேர் காணாமல் போயுள்ளனர். மொத்த உயிரிழப்புக்களில் 118 உயிரிழப்புக்கள் கண்டி மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளன. இம்மாவட்டத்தில் மேலும் 171 பேர் காணாமல் போயுள்ளதாக பேரிடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நுவரெலியா மாவட்டத்திலேயே இரண்டாவதாக அதிக உயிரிழப்புக்கள் ☞6

### பேரிடர் மீட்புப் பணிகளுக்கென

## நாடாளுமன்ற அனுமதியின்றி நிதியம் அமைக்க முடியாது

### செய்வதை சட்டபூர்வமாகச் செய்யுங்கள் என்கிறார் ஹர்ஷ

பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவியளிப்பதற்குத் திறைசேரியில் போதுமான நிதி உள்ளது. நிதி பற்றாக்குறை ஏதும் கிடையாது.

இலங்கையை மீளக்கட்டியெழுப்பல் நிதியம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அரச பொது நிதிச் சட்டத்தின் 148 ஆவது பிரிவின் பிரகாரம் நாடாளுமன்றத்தின் அனுமதி இல்லாமல் பொது நிதியம் ஒன்றை உருவாக்க முடியாது. செய்வதைச் சட்டத்தின் பிரகாரம் செய்யுங்கள், ஏனெனில் செலவு செய்யும் ஒவ்வொரு ரூபாவுக்கும் பொறுப்புக் கூற வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி ☞6

## புதிய கல்விச் சீர்திருத்தத்திலாவது தமிழர் வரலாறு உட்புகுத்தப்படுமா?

### பிரதமரிடம் சிறீதரன் எம்.பி. கேள்வி

இலங்கையில் உள்ள கல்வி அமைச்சின் பாடத்திட்டங்களில் தமிழர் வரலாறு திட்டமிட்டே மறைக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. வரலாறு, சித்திரம் போன்ற பாடங்களில் தமிழ்மன்னர்களின் பெயர்கள், அக்கால இலச்சினைகள், கல்வெட்டுக்கள் என்பன திட்டமிட்டே மறைக்கப்பட்டுள்ளன. 1982களில் இலவச பாடநூல் வழங்கும் திட்டம் உருவாக்கப்பட்டபின் ☞6

## தமிழ் மன்னர்கள் வரலாறும் பாடத்தில் உள்ளடக்கப்படும்

### பிரதமர் ஹரினி உறுதிமொழி

வரலாறு ஒரு பாடமாக கற்பிக்கப் படுகின்றதேதவிர மாணவர்கள் மத்தியில் சிங்கள வரலாறு, தமிழ் வரலாறு என்று வேறுபடுத்தவில்லை. புதிய கல்வி மறுசீரமைப்பின் தமிழர் வரலாறு மற்றும் தமிழ் மன்னர்களின் வரலாறுகள் பாடப்பரப்பில் உள்ளடக்கப்படும் என பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றைய அமர்வின்போது, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் விடுதலையில் தீரத்துடன் போராடிய தமிழ் மன்னர்களின் வரலாறு பாட நூல்களில் உட்புகுத்தப்படுமா? கல்வித்திட்டத்தில் வரலாற்றுப் பகுதியில் தமிழர் வரலாற்றுக்குரிய ☞6

## பேரிடர் ஏற்படுத்திய பாதிப்புக்கள் குறித்த உண்மையை மறைக்கிறது ஆளும்தரப்பு

### தமிழ் அரசுக் கட்சி செயலாளர் சுமந்திரன் கண்டிப்பு

வெள்ள பேரிடர் தொடர்பில் ஏற்பட்ட சேதங்கள், உயிரிழப்புகள் தொடர்பான உண்மைத்தன்மையினை ஆளும்தரப்பு வெளிப்படுத்தவேண்டும், முழு புசணிக்காயை சோற்றுக்குள் மறைக்கும் செயற்பாட்டினை ஆளும்தரப்பு முன்னெடுக்ககூடாது என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் தெரிவித்தார்.

ஆளும்தரப்பிற்கு எதிராக பேசக்கூடாது என்ற தோரணையில் எவரும் எங்களை விமர்சிக்கக்கூடாது. உண்மை வெளிவந்தால்தான் நிவாரணப்பணிகளும் சரியானமுறையில் நடைபெறும் எனவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு களுவாஞ்சிகுடி பகுதியில் வெள்ள பேரிடர்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ் அரசுக் கட்சியின் உதவிப் பொருட்கள் வழங்கும் பணிகள் நேற்று ஆரம்பித்துவைக்கப்பட்டன.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற ☞7

## மக்களுக்காக இரவிரவாகத் தூங்காது பணியாற்றும் அநுவிற்கு ஒத்துழைப்பு

### ரெலோ தலைவர் செல்வம் அறிவிப்பு

இக்கட்டான நிலையில் நாட்டு மக்களுக்காக இரவிரவாக தூங்காது பணிசெய்யும் ஒரு அரசுத் தலைவர்யை இந்த நாடும் நாமும் பெற்றதற்காக பெரு மகிழ்ச்சியடைகின்றேன். ஆளும்தரப்புடன் இணைந்து புதுநாட்டை கட்டியெழுப்ப நாங்கள் தயார். பாகுபாடுகள் வேண்டாம். ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கேள்விக்கு, அவர்களுக்குஅனுபவமில்லை என்பதை மட்டுமே பதிலாகத் தரமுடியாத நிலைதான் எதிர்க் கட்சிகளுக்கு. பேரிடரினால் ஏற்பட்ட உயிரிழப்புக்களை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம் குறைத்திருக்க முடியும் என்றுஎதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டினாலும்கூட, இடருக்குப் பின்னரான நடவடிக்கைகள் குறித்து பெரியளவிலான குற்றச்சாட்டுக்கள் எவையும் இதுவரையில் இல்லை. சில இடங்களுக்குஉதவிகள்சென்றடையவில்லை என்கிற குற்றச்சாட்டு உண்டு. அது அந்த இடங்களை அணுகுவதற்கான போக்குவரத்து உள்ளிட்ட சவால்களின் காரணமாக எப்போதும் ஏற்படக்கூடிய குற்றச்சாட்டுக்கள்தான் என்பதைத் தவிர வேறு பெரிய குற்றச்சாட்டுக்கள் எதுவும் இதுவரையில் இல்லை. உயிரிழப்புக்களின் எண்ணிக்கை சரியாகத் தெரியவரவில்லை அல்லது அந்த எண்ணிக்கையைக் குறைத்துக்காட்ட ஆளும்தரப்பு முற்படுகின்றது என்கிற குற்றச்சாட்டும் ஒன்றுண்டு. எனினும் பதற்றமான சூழலிலும் பலர் காணாமற்போயிருக்கிறார்கள் என்கிற நிலையிலும் மீட்கப்படும் சடலங்களின் அடிப்படையில்தான் உயிரிழந்தவர்களின் உறுதியான எண்ணிக்கையை கணக்கிடமுடியும் என்பதும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டியதே. எனவே உறுதிப்படுத்தப்பட்ட விவரங்களை மட்டுமே கவனமாக வெளியிடவேண்டிய இக்கட்டும் ஆளும்தரப்புக்கு உள்ளது.

இத்தகைய பேரிடர்களை எதிர்கொண்ட அனுபவம் முன்னாள் அரசுத்தலைவர்களான ரணில் விக்கிரமசிங்க மற்றும் சந்திரிகா ஆகியோருக்கு இருக்கின்றது என்றாலும் அவர்களைத் தற்போது பயன்படுத்திக்கொள்வதற்கு ஆளும்தரப்பு முன்வரவில்லை. அவர்களை ஒரு ஆலோசனைக்குக்கூட அழைக்கவில்லை. இந்த நிலையில்தான் ரணில் விக்கிரமசிங்க, பேரிடரை எதிர்கொண்ட விதம் குறித்த தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதற்கும் தற்போதைய ஆளும்தரப்பின் நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்குமாக எதிர்க் கட்சிகளின் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தார். நுகேகொடை பேரணியில் கலந்துகொண்ட கட்சிகளின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்திலும் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தின் முடிவில், பேரிடர் முகாமைத்துவம் மற்றும் சீரமைப்புத் தொடர்பான அரச நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து நாடாளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுவொன்றும், பேரிடர் முகாமைத்துவம் தொடர்பான காரணங்கள் மற்றும் தவறுகளைப் பற்றி அறிக்கை செய்ய, எதிர்க்கட்சி உறுப்பினரால் தலைமை தாங்கப்படும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றையும் அமைக்குமாறு வலியுறுத்துப்பட்டுள்ளது.

முன்வைக்கப்பட்டுள்ள 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தை நிறைவேற்றாமல், குறை நிரப்பு பிரேரணையொன்றை முன்வைக்க வேண்டும். பேரிடர்களால் ஏற்பட்டுள்ள முழுமையான சேதங்கள் மற்றும் அவற்றை மறுசீரமைப்பதற்கான செலவுகளை மதிப்பிட்டதன் பின்னர் ஜனவரியில் புதிய வரவு - செலவு திட்டமொன்றை முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில் அரச தரப்பின் தவறுகள் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டதோடு, ஆளும்தரப்பிடம் சில முக்கிய யோசனைகளை முன்வைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய சில தீர்மானங்களும் எடுக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

தேசிய பேரிடர் முகாமைத்துவத் திட்டம் 2023-2030 குறித்து அரச நிறுவனங்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த 2025ஆம் ஆண்டில் செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தப்பட்ட போதிலும், நவம்பர் 27 வியாழக்கிழமை பேரிடர் முகாமைத்துவச் சட்டத்தின் விதிகளை நடைமுறைப்படுத்தாமை, நவம்பர் 28 வெள்ளிக்கிழமை ஒரு விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டதன் மூலம், திட்டத்தின் கீழ் பணிகள் ஒதுக்கப்பட்ட அனைத்துத் திணைக்களங்கள், பிரிவுகள் மற்றும் ஏனைய அதிகாரிகளையும் செயலற்றதாக்கியமை. நாடாளுமன்றம், அமைச்சரவை மற்றும் பேரிடர் முகாமைத்துவ நிலையம் ஆகியவற்றைக் கடந்து உதவி விநியோகத்தை அரசியல் மயமாக்கியமை மற்றும் அதற்கு இணையாக மற்றுமொரு பேரிடர் உதவி நிதியத்தை நிறுவியமை. இந்த பேரிடரை எதிர்கொள்ள எவ்வித வியூகமும் இல்லாமை. புனரமைப்பு மற்றும் பழுதுபார்ப்புக்கான திட்டங்கள் இல்லாமை என்பன குறித்தும் கூட்டத்தில் முக்கியமாக ஆராயப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் இனிவரும் நாட்களில் ஆளும்தரப்பு சில முக்கிய விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும் என்பதைச்சுட்டிக்காட்டுவது என்றும் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. அசுத்தமடைந்த இறைச்சி, மீன் மற்றும் முட்டைகள் விற்பனை தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது அதிலொன்று.

ஆளும்தரப்பின் அனுபவமின்மையால், பேரிடர் முகாமைத்துவம் மற்றும் சீரமைப்பு தொடர்பான மேற்பார்வைக் குழுவை நாடாளுமன்றம் நியமிப்பது அவசியம், இதற்கு கபீர் ஹாசிம் போன்ற அனுபவம் வாய்ந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் தலைமை தாங்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆளும்தரப்பு மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களில் அனுபவம் வாய்ந்தவர்கள் சம அளவில் அந்தக் குழுவில் இடம்பெறவேண்டும். அரசமைப்பு மற்றும் சட்டங்களின்படி பேரிடரிற்குப் பின்னரான நிலமைகளை வழமைக்குக் கொண்டுவருதல் மற்றும் சீரமைப்புக்கான பொறுப்பு நாடாளுமன்றம், அமைச்சரவை மற்றும் பேரிடர் முகாமைத்துவ நிலையம் ஆகியவற்றுக்கே உரியது என்பதும் வலியுறுத்தப்பட்டது.

நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுவானது பேரிடர் முகாமைத்துவம் மற்றும் புனரமைப்பு தொடர்பான ஆளும்தரப்பு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து, நாடாளுமன்றத்திற்கு அறிக்கை செய்யவேண்டும்.

இந்த மேற்பார்வைக் குழுவானது பேரிடரின் குறுகிய கால மற்றும் நீண்ட கால பொருளாதார விளைவுகளை மதிப்பிடுவதற்கு ஒரு பொருளாதாரப் பிரிவையும் நியமிக்கும்.

அதுநேரம் நவம்பர் 28 அன்று ஏற்பட்ட பேரிடர் முகாமைத்துவம் தொடர்பான காரணங்கள் மற்றும் தவறுகளைப் பற்றி அறிக்கை செய்ய, ஆளும்தரப்பு மற்றும் எதிர்க்கட்சியில் சம எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்ட, எதிர்க்கட்சி உறுப்பினரால் தலைமை தாங்கப்படும் தனியானஒருநாடாளுமன்றத்தெரிவுக்குழுவை அமைக்க வேண்டும் என்றும் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இக்குழுவானது அதிகபட்சமாக 6 மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். மாவட்டங்களின் உதவிப் பணிகள் மற்றும் சீரமைப்புக்கு மாவட்டச் செயலாளர்கள் பொறுப்பேற்கவேண்டும். மாவட்டச்செயலாளர்கள்பேரிடர் முகாமைத்துவ நிலையத்திற்கு அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். அரசியல்வாதிகளின் தலையீடு அகற்றப்பட வேண்டும். தற்போதுள்ள வரவு செலவுத் திட்டம் பொருத்தமற்றது. ஒரு குறைநிரப்பு பிரேரணை போதுமானது. சேதத்தின் முழுமையான அளவு தெரிந்த பின்னர், 2026 ஜனவரியில் ஒரு புதிய வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

நடுத்தர மற்றும் குறுகிய காலத்துக்கு வெளிநாடுகளிலிருந்து சீரமைப்பு உதவி கிடைப்பது சாத்தியமில்லை. பிரிட்டனின் பொருளாதாரம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பொருளாதாரம் என்பன நெருக்கடியில் உள்ளன. எஞ்சிய கூடுதல் நிதிகள் உக்ரைன் போருக்கு செலவிடப்படும். அமெரிக்கா உதவி வழங்க மறுத்துவிட்டது. இந்தக் காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்பட்ட இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா மற்றும் இலங்கை ஆகிய 4 நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட முடியும்.

பேரிடர் சேதங்களைப் பழுதுபார்ப்பதற்கும் சீரமைப்பதற்கும் சலுகை வட்டி விகிதங்களில் நீண்டகாலகடன்களைப்பெறுவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி, ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கி மற்றும் ஜெய்கா ஆகியவற்றுடன் கலந்துரையாடல்களைத்தொடங்கவேண்டும். தொடருந்து சீரமைப்புக்கு இந்தியாவின் உதவியை நாடவேண்டும். மண்சரிவுகளில் அதிக கவனம் செலுத்தி, காலநிலை மாற்றக் கொள்கையை மீண்டும் செயல்படுத்த வேண்டும். சமீபத்திய உயர் நீதிமன்றத் தீர்ப்பின்படி, இந்தக் கவனக்குறைவு அரசமைப்பை மீறும் மற்றும் பொது நம்பிக்கையை மீறுதல் ஆகும்.

பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு உதவிகள் கிடைக்க வழிவகை உள்ளது. பொருளாதாரத்தின் இழப்பு மற்றும் சீரமைப்பின் செலவு காரணமாக, நடுத்தரக் காலத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு வருவாய் 15 சதவீதத்தைவிட அதிகரிக்க வேண்டியுள்ளது. அத்துடன், ஆண்டுக்கு குறைந்தபட்சம் 6 சதவீத மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியும் தேவைப்படுகிறது. உட்கட்டமைப்பை சீரமைப்பது மற்றும் சமூக அமைப்பை உறுதிப்படுத்துவது குறித்து வழிகாட்டுதலைப் பெறுவதற்காக அனைத்து மதத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் பல்வேறு துறைகளில் உள்ள முக்கியப் பிரமுகர்கள் கூட்டத்தைக் கூட்டுதல் காலத்தின் தேவையாகும்.

தொடக்கக் கூட்டத்திற்கு நான்கு மகாநாயக்கர்கள் தலைமை தாங்க வேண்டும். கரு ஜயசூரிய அந்தக் கூட்டத்தின் ஏற்பாட்டாளர்களில் ஒருவராக இருக்க வேண்டும். ஆளும்தரப்பு மற்ற ஏற்பாட்டாளரை நியமிக்கவேண்டும். அரசமைப்பின் 9 மற்றும் 10 ஆவது பிரிவுகளை அங்கீகரித்து நிலைநிறுத்துதல். புத்தசாசன அமைச்சர், புத்தசாசன அமைச்சின் செயலாளர் மற்றும் பௌத்தஅலுவல்கள்பணிப்பாளர்பதவிகளுக்கு மகாநாயக்கர்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய நபர்களை நியமித்தல். விகாரைகள் மற்றும் தேவாலயங்களின் விவகாரங்களில் தலையிடாமல் இருத்தல்.

தலதா மாளிகை மற்றும் பிற முக்கியக் கோயில்களில்நடைபெறும்அரசநிகழ்வுகளின் போது வெள்ளைத் துணிகளை அணிதல். முன்னணி இந்து பிரமுகர்களுடன் கலந்துரையாடி, இந்து அலுவல்கள் அமைச்சர், அமைச்சின் செயலாளர் மற்றும் இந்து அலுவல்கள் பணிப்பாளர் ஆகியோரை நியமித்தல். தற்போது அரசமைப்பு தொடர்ந்து மீறப்பட்டு வருகிறது. இந்த பேரழிவு மிக்க பேரிடரிற்கு இது ஒரு முக்கியக் காரணமாகும்.

அரச அதிகாரம் பெலவத்தையில் உள்ள ஜே.வி.பி.யின் அரசியல் குழுவால் பயன்படுத்தப்படுகிறது. இந்த பேரிடரின்போது அரசுத் தலைவர் அலுவலகமும் பிரதமர் அலுவலகமும் நடவடிக்கைகளின் மையமாக இருக்கவில்லை. பெலவத்தை ஜே.வி.பி. அலுவலகமே மையமாக இருந்தது. அரசுத் தலைவர் பாதுகாப்பு அமைச்சுக்குச் சென்றது மட்டும்தான் அதற்கு மேலாக நடந்தது. எனவே, அதிகாரத்தை பெலவத்தையிலிருந்து எடுத்து நாடாளுமன்றத்திற்குத் திரும்பக் கொண்டு வரவேண்டும் போன்றவிடயங்கள்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டு ஆராயப்பட்டுள்ளன.

ஆளும்தரப்பு இந்த விடயங்கள் குறித்து கவனத்தில் எடுக்குமா என்பது தெரியவில்லை. தங்களை அனுபவமற்றவர்கள் என்று ஒதுக்குவதற்காகவே எதிர்க்கட்சிகள் இத்தகைய கோரிக்கைகளையும் முன்னெடுப்புக்களையும் செய்யகின்றன என்றவகையில் அவற்றை அது நிராகரிக்கும் என்றே நான் நினைக்கின்றேன். ..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பேரிடர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பேரிடர் ஏற்படுவதற்கு முன்னரான அரசுத் தலைவரின் நடவடிக்கைகளிலும், முன்னெச்சரிக்கை தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்றதாகத் தெரியவில்லை.

இயற்கைப் பேரிடர் ஒன்று ஏற்படும்போது, அதனைத் தடுப்பதற்கு யாராலும் முடியாது. ஆனால் முன்கூட்டிநடவடிக்கைஎடுத்திருந்தால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை முடியுமானவரை குறைத்துக்கொள்ள முடியும் என்றே தெரிவிக்கிறோம். அவ்வாறான திட்டம் ஆளும்தரப்பிடம் இருந்ததா?

அவ்வாறான திட்டம் ஆளும்தரப்பிடம் இருக்கவில்லை. அதனால்தான் இதுதொடர்பில் தேடிப்பார்க்க வேண்டி இருக்கிறது. பேரிடர் தொடர்பில் காலநிலை அவதான நிலையம் அறிவித்ததா, இல்லையா அல்லது அதிகாரிகள் இது தொடர்பில் முன்கூட்டி அறிவுறுத்தியும் ஆளும்தரப்பு செயற்படவில்லையா என தேடிப்பார்க்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அதற்காக நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமித்து, இந்த தவறு எங்கு ஏற்பட்டுள்ளது என்பதை தேடிப்பார்க்க வேண்டும் என முன்மொழிகிறேன்.

எதிர்காலத்தில் இவ்வாறான விடயங்கள் மீண்டும் இடம்பெறாமல் இருப்பதற்கு இதுதொடர்பான தகவல்கள் எங்களுக்கு அவசியமாகும். இடம்பெற்ற பேரிடரில் சிக்கி இறந்தவர்களின், காணாமல் போயுள்ளவர்களின் எண்ணிக்கையை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதளவுக்குப் பெரும் அழிவு ஏற்பட்டுள்ளது. அதனால் இவ்வாறான பேரிடர் ஏற்படும் என்ற தகவல் தெரிந்தும் அதுதொடர்பில் செயற்படாமல் இருந்தவர்கள் யார் அல்லது தகவல் வழங்காமல் இருந்தார்களா? இதற்குப் பொறுப்புக்கூறவேண்டியவர்கள் யார் என்ற விடயங்களை அறிந்துகொள்ளும் உரிமை நாட்டுக்கு மக்களுக்கு இருக்கிறது. அதேபோன்று இதனை அறிந்துகொள்ளும் உரிமைநாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இருக்கிறது. அதனாலே இது தொடர்பில் நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைத்து விசாரணை மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கிறோம் - என்றார்.

## மக்களுக்காக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சிகள் என்பதற்காக எல்லாவற்றையும் எதிர்க்காதீர்கள். ஆளும்தரப்புடன் எவ்வித கோபமும் கிடையாது. ஆளும்தரப்பின் சிறந்த தீர்மானங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பெருந்தோட்டத்துறை, சமூக உட்கட்டமைப்பு அமைச்சு, வர்த்தகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதி , திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இயற்கை பேரிடர்த்திற்கு ஆளும்தரப்பை குற்றஞ்சாட்ட முடியாது. தற்போதைய நெருக்கடியில் இருந்து எவ்வாறு மீளலாம் என்ற ஆலோசனைகளை அனைவரும் முன்வைக்க வேண்டும். ஆளும்தரப்பை விமர்சிக்கும் நேரம் இதுவல்ல. அரசுத் தலைவருக்கு நான் நன்றி கூறுகின்றேன். இரவு பகலாக அவர் முழு மூச்சாகச் செயற்படுகின்றார். அவருக்கும் ஆளும்தரப்புக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது அயல் நாடான இந்தியாவுடன் ஆளும்தரப்பு இணக்கமாகவே செயற்படவேண்டும். இந்தியாதான் எங்களுக்கு முதலில் உதவி செய்யும் நாடு. எனவே இந்தியாவின் கரத்தை இறுக்கப் பிடிப்பதுதான் எமது நாட்டுக்கு நல்லது. இந்தியப் பிரதமர் , தமிழ் நாட்டு முதலமைச்சர் ஆகியோருக்கு இலங்கை மக்கள் சார்பாக நன்றி கூறுகின்றேன்.

எமதுவன்னிமாவட்டத்தில் அரசஅதிபர்கள், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபை, நகரசபை தவிசாளர்கள் , உறுப்பினர்கள், தொண்டர்கள் முப்படையினருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கைப் பேரிடரால் மன்னார் மாவட்டம் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தை கவனத்திற் கொள்ளுமாறு ஆளும்தரப்பிடம் கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள், கடற் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஒரு வீட்டுக்கு 25000 ரூபா கொடுக்கப்படுவதை அறிந்த மகிழ்ச்சி, இன்னும் கொஞ்சம் அந்தத் தொகையை அதிகரிக்க வேண்டும். எமது பிரதேச சபை, நகரசபைகளின் தவிசாளர்கள் இயற்கை பேரிடர் தொடர்பில் முழு மூச்சாகச் செயற்படுகின்றார்கள். அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரிடர் ஒன்று ஏற்படும்போது 100 வீதம் ஒரு வேலையை முழுமையாகச் செய்ய முடியாது. ஒரு சில குறைகள் இருக்கும். எனவே ஆளும்தரப்பை விமர்சிப்பவர்கள் இதனை புரிந்து கொள்ள வேண்டும். இயற்கை பேரிடரால் பேரழிவு ஏற்பட்டுள்ளது. ஆகவே குறைகளை மாத்திரம் குறிப்பிட்டுக் கொண்டிருக்காதீர்கள். இக்கட்டான நிலையில் இருந்து மீள்வதற்கான ஆலோசனைகளை முன்வையுங்கள்.

ஆளும்தரப்புடன் இணைந்து புதுநாட்டை கட்டியெழுப்ப நாங்கள் தயார். எல்லோரும் இயற்கையால் பாதிக்கப்பட்ட மக்கள் என்ற ரீதியில் ஆளும்தரப்புடன் இணைந்து செயற்படுவோம். பாகுபாடுகள் வேண்டாம். எதிர்க்கட்சிகள் என்பதற்காக எல்லாவற்றையும் எதிர்க்காதீர்கள். நாம் அன்று சபையிலிருந்து வெளிநடப்புசெய்த்து எமக்கு நேரம் தரவில்லை என்பதற்காக மட்டுமே. ஆளும்தரப்புடன் எவ்வித கோபமும் கிடையாது.ஆளும்தரப்பின் சிறந்த தீர்மானங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் - என்றார்.


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆளும்தரப்பின் பொறுப்பு

'தித்வா' சூறாவளி இலங்கையில் ஏற்படுத்திய பேரழிவு உயிரிழப்புகளிலும் சொத்துச்சேதத்திலும் மட்டுமல்ல, ஆழமான மனிதாபிமான நெருக்கடியிலும் வெளிப்படுகிறது. நாடு முழுவதும் மக்கள் துயரத்தில் தத்தளிக்கின்ற நேரத்தில், சமூக ஊடகங்களில் அரசை நோக்கிய கடும் விமர்சனங்கள் பெருகி வருகின்றன. அவை தாமதமான எச்சரிக்கை அறிவிப்புகள், மந்தமான மீட்பு நடவடிக்கைகள், ஒத்துழைப்பு இல்லாத நிர்வாகம் போன்ற குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றன. இத்தகைய சூழலில் மக்கள் கோபமும் ஏமாற்றமும் வெளிப்படுவது இயல்பு. அது ஜனநாயகத்திற்கே உரிய பண்பு.

ஆனால், இவ்விமர்சனங்களுக்கு எதிராக அரசின் பதிலடிதான் மிகப் பெரிய கவலையை எழுப்பியுள்ளது. பொதுமக்கள் பாதுகாப்புப் பிரதி அமைச்சரான சுனில் வாட்டகல, சமூக ஊடகங்களில் அரசுத் தலைவரையும் சில உயர்மட்ட அதிகாரிகளையும் குறிவைத்து திட்டமிட்ட அவதூறுப் பரப்புரைகள் நடக்கின்றன என்று குற்றஞ்சாட்டி, அவற்றுக்கு எதிராக அவசரநிலைச் சட்டங்களைப் பயன்படுத்துமாறு காவல்துறைக்கு உத்தரவிட்டார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த நிலைமை நாட்டின் ஜனநாயகச் சுதந்திரங்களின் நிலை குறித்த கேள்விகளைத் தூண்டியுள்ளது.

நாடு தொலைந்து போனவர்களைத் தேடி மீட்பு முயற்சிகளில் இருக்கின்ற வேளையில், மக்கள் அதிருப்தியுடன் அரசைப் பற்றிப் பேசுவது ஆச்சரியம் அல்ல. அரசின் செயல்திறனைக் கணக்கிடும் முக்கியமான கருவி மக்களின் கருத்தே. அரசியல் தலைவர்களையும் அதிகாரிகளையும் விமர்சிப்பது ஜனநாயகத்தில் குடிமகனுக்கு உரிய உரிமை. அரசமைப்பே இதனை உறுதிசெய்கிறது. குறிப்பாகப் பேரிடர் வேளைகளில் பொது விமர்சனங்கள் அரசின் செயல்பாடுகளை மேம்படுத்த உதவும் முக்கியக் கோட்பாடுகளைக் காட்டுகின்றன.

அதேநேரத்தில், கருத்துச் சுதந்திரத்திற்கும் எல்லைகள் உள்ளன என்பது உண்மை. பொய்த் தகவல்கள், இனக்கலவரத்தைத் தூண்டும் கருத்துகள், வன்முறையைத் தூண்டும் அறிவிப்புகள், அல்லது ஒருவரின் கண்ணியத்தைத் தாக்கும் அவதூறு சட்டரீதியாக கட்டுப்படுத்தப்பட வேண்டியது அவசியம். ஆனால் ஒவ்வொரு விமர்சனத்தையும் அவதூறாகக் கருதி நடவடிக்கை எடுப்பது ஜனநாயகச் சுதந்திரத்தின் அடித்தளத்தையே சேதத்திற்குள்ளாக்கும் செயலாகும். குறிப்பாக பேரிடரால் பாதிக்கப்பட்ட நாட்டில் மக்கள் தங்கள் குறைகளை வெளிப்படுத்தும் உரிமையை அரசு கட்டுப்படுத்த முயல்வது ஆபத்தான முன்னுதாரணமாக மாறக்கூடும்.

இந்த நிலையில், சமூக ஊடக விமர்சனங்களை கட்டுப்படுத்த அவசரநிலைக் சட்டங்களைப் பயன்படுத்தும் அரசின் முடிவு பல்வேறு சந்தேகங்களைத் தோற்றுவிக்கிறது. அவசரநிலைக் சட்டங்கள் நாட்டின் பாதுகாப்பு அல்லது மிகப்பெரிய பேரழிவு சூழலில் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டிய தனியான சட்டங்கள். அவற்றை நிகழ்நிலை விமர்சனங்களை அடக்குவதற்குப் பயன்படுத்தத் தொடங்கினால், குடிமக்களின் குரல் நடுங்கத் தொடங்கும். மக்கள் தங்கள் அதிருப்தியையும் நியாயமான கேள்விகளையும் வெளிப்படுத்த அஞ்சத் தொடங்குவார்கள். இது அரசின் மீது நம்பிக்கையை குறைத்து, சமூகத்தில் அச்சத்தையும் அமைதியின்மையையும் அதிகரிக்கும்.

மேலும், இதுவரை தனது ஆட்சியை கருத்துச் சுதந்திரத்திற்கு பாதுகாவலாகக் காட்டிய இந்த ஆளும்தரப்பு திடீரென விமர்சனங்களுக்கு எதிராகச் சிறப்புச் சட்டங்களைப் பயன்படுத்த முனைவது பலருக்கும் அதிர்ச்சியூட்டும் முடிவாகவே தெரிகிறது. மக்கள், குறிப்பாக பேரிடரால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், தங்கள் உணர்ச்சியையும் துயரத்தையும் வெளிப்படுத்தும் உரிமை கொண்டவர்கள். அவர்களின் குரலை அடக்குவது ஜனநாயகத்தின் அடிப்படைக் கொள்கைகளையே கேள்விக்குள் கொண்டுவரும்.

ஆளும்தரப்புச் செய்ய வேண்டியது விமர்சகர்களை மௌனப்படுத்துவது அல்ல; அவர்களின் குரலைக் கேட்டு, குறைகளைத் திருத்தி, நம்பிக்கையை உருவாக்குவது. வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு, மற்றும் பொதுமக்களுடனான நேரடி உரையாடல்–இவைதான் நெருக்கடியை சமாளிக்கச் சிறந்த ஆயுதங்கள். தவறுகளை ஒப்புக்கொள்வதும், முந்தைய குறைபாடுகளை சரிசெய்வதும், நல்ல அடிப்படையின் அடையாளம். பேரிடர் வெளிப்படுத்திய அமைப்புச் சீர்கேடுகளைத் தீர்ப்பதே அரசின் முன்னுரிமையாக இருக்க வேண்டும்.

சமூக ஊடகங்கள் அரசுக்கு எதிரான களமாக மட்டுமே இல்லை; ஆதாரமான தகவல்கள், பொதுமக்களின் உணர்வுகள், நிலத்திலுள்ள பிரச்சினைகள் போன்றவற்றை மிகத் துல்லியமாகத் தெரிவிக்கும் முன்னெச்சரிக்கை மையங்களாகவும் உள்ளன. மக்களின் குரலைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக, அரசு அதை அறியும் கருவியாகப் பயன்படுத்தவேண்டும். மக்களின் அதிருப்தி எங்கு உள்ளது, எந்த பகுதிகளில் உதவி குறைவாகியுள்ளது, எந்த திட்டங்கள் செயல்திறன் இழந்துள்ளன என்பவை இத்தகைய உரையாடல்களில் வெளிப்படும்.

சுருக்கமாகச் சொன்னால், 'தித்வா' புயல் நாட்டின் பலவீனங்களை மட்டுமல்ல, இலங்கையின் ஜனநாயகத்தின் வலிமையையும் சோதிக்கிறது. நெருக்கடியை சமாளிக்கும் பொழுது குடிமக்களின் குரலை அடக்குவது அல்ல, அது ஒலிக்கும் வழியைக் கூர்மையாக்கி, அதற்கேற்ற தீர்வுகளை வழங்குவதே உண்மையான முன்னேற்றம். இலங்கை மக்கள் இன்றைய துயரத்திலிருந்து எழுந்து நிற்க வேண்டுமானால், ஆளும்தரப்பு அவர்களின் குரல் கேட்கத் தயாராகவும், அவர்களுடன் இணைந்து செயல்படத் துணிவாகவும் இருக்க வேண்டும்.

# ஐக்கிய அரபு இராச்சியத்தின் உதவிப் பொருள்கள் வந்தன

நாட்டில் தற்போது முன்னெடுக்கப்படும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக ஐக்கிய அரபு இராச்சியத்தின் இரண்டு மனிதாபிமான உதவி விமானங்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை நாட்டை வந்தடைந்தன.

சி-17 விமானங்களில் இரண்டு மீட்புப் படகுகள், தேடுதல் பணிகளில் ஈடுபடுத்தப்படும் நான்கு கே9 வகை நாய்கள், டபிள் கெப் மற்றும் எஸ்யுவி (ஜீப்) உள்ளிட்ட மீட்பு வாகனங்கள், லொரிகள் மற்றும் 53 பணியாளர்களைக் கொண்ட விசேட நகர்ப்புற தேடுதல் மற்றும் மீட்புக் குழு உள்ளிட்ட அத்தியாவசிய பேரிடர் மீட்பு உபகரணங்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

கொழும்பிற்கான ஐக்கிய அரபு இராச்சிய தூதுவர் கலீத் நாசர் அல்அமேரி மற்றும் ஐக்கிய அரபு இராச்சிய நிவாரணக் குழுவின் தலைவர் கலாநிதி ஹமூத் அலபாரி ஆகியோரால் இந்த உதவிப் பொருள் இலங்கை அதிகாரிகளிடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கப்பட்டன.

ஆளும்தரப்பின் சார்பாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் மத்திய கிழக்குப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர்களான இஷாரா டி சில்வா மற்றும் தினுஷிகா தசநாயக்க ஆகியோர் இந்த நிவாரணப் பொருட்களைப் பொறுப்பேற்றனர். இந்த நெருக்கடியான நேரத்தில் ஐக்கிய அரபு இராச்சியம் வழங்கிய அவசர ஆதரவிற்கு இலங்கை ஆளும்தரப்பு நன்றி தெரிவித்துள்ளது.

# அவசர மருத்துவ உதவிகள் இந்தியாவிலிருந்து வருகை

அவசர மருத்துவ உதவிப்பொருள்கள் இந்தியாவில் இருந்துவந்துசேர்ந்தன அவசர மருத்துவ உதவிகளை ஏற்றிய இந்திய விமானப்படையின் சி-17பு விமானம் செவ்வாய்கிழமை நாட்டை வந்தடைந்தது.

இந்த மருத்துவப் பொருட்களில் அத்தியாவசிய மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் தொடர்ச்சியான மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தக்கூடிய கள வசதிகள் அடங்கி உள்ளன.

இந்திய உயராணையர் சந்தோஷ் ஜா இந்த உதவிப் பொருட்களை உத்தியோகபூர்வமாக கையளித்ததோடு இராணுவப் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் டிரால் டி சில்வா உள்ளிட்ட குழுவினர் அவற்றை பொறுப்பேற்றனர்.

அவசர நிலைமைகளில் துரிதமாகப் பயன்படுத்துவதற்குஏற்றவகையில் வடிவமைக்கப்பட்ட முழுமையான இருகள மருத்துவமனை அலகுகளும் இதில் அடங்கும். இவற்றில் ஒரு அலகு வெலிமடை பகுதியில் நிறுவப்பட உள்ளது.

இது தவிர, பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவ உதவி வழங்குவதற்காக இந்தியாவிலிருந்து மருத்துவர்கள், வைத்திய நிபுணர்கள், மயக்க மருந்து நிபுணர்கள் மற்றும் ஏனைய சுகாதார நிபுணர்கள் உட்பட 73 மருத்துவ நிபுணர்களும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

# இக்கட்டான நேரத்தில் ஆளும்தரப்பை நெருக்கடிக்கு உள்ளாக்கவேகூடாது

## தமிழ் அரசு எம்.பி. கோடீஸ்வரன் உருக்கம்

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள இந்த இக்கட்டான நேரத்தில் ஆளும்தரப்பை நெருக்கடிக்குள்ளாக்க முயற்சிக்கக்கூடாது. கட்சி பேதங்கள் இன்றி நாட்டு மக்களுக்காக ஒன்றாக பயணிக்க வேண்டிய பொறுப்பு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் உள்ளது என இலங்கை தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பெருந்தோட்டத்துறை, சமூக உட்கட்டமைப்பு அமைச்சு, வர்த்தகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதி , திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய நெருக்கடியான சூழலில் இருந்து மீள்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். இந்த நேரத்தில் நாங்கள் அரசியல் பாகுபாடுகளை நிறுத்தி வைத்துவிட்டு, அரசியல் செய்வதை நிறுத்தி, ஆட்சியை பிடிப்பதற்கோ வேறு சதித்திட்டங்களுக்கோ உடந்தையாக இருக்காமல் நாட்டு மக்களுக்காக ஒன்றாகப் பயணிக்க வேண்டிய பொறுப்பு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் உள்ளது. ஒருவரையொருவர் குற்றம் கூறாமல் மக்களையும் பொருளாதாரத்தையும் எமது நாட்டையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

இந்த இக்கட்டான நேரத்தில் அரச அதிகாரிகள் தங்களால் இயன்ற பணிகளை செய்கின்றனர். இவர்களுக்கு எமது ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும். அம்பாறை மாவட்டத்தில் விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். கால்நடைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நெற்காணிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவிகளை வழங்க வேண்டும். அதேபோன்று மலையகம் அதிகளவில் மண்சரிவு பேரிடர்களில் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த மக்களுக்கும் தேவையான உதவிகளை வழங்க வேண்டும் - என்றார்.

# சிறீதரனின் கேள்வியும் பிரதமரின் பதிலும்

யாழ்ப்பாணம் எழுவைதீவு சரவணபவா வித்தியாலயத்தின் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அவதானம் செலுத்துவதாக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சரான பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூலவிடைக்கான கேள்வி நேரத்தின்போது, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் யாழ்ப்பாணம் எழுவைத்தீவிலுள்ள சரவணபவா வித்தியாலயத்தின் மாணவர்கள் க.பொ.த சாதாரணத் தரப் பரீட்சைக்கு தோற்றும் போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து கேள்வியெழுப்பப்பட்டது.

எழுவைத்தீவிலுள்ள சரவணபவா வித்தியாலயத்தின் மாணவர்கள் க.பொ.த சாதாரணத் தரப் பரீட்சையில் தோற்றுவதற்காக பரீட்சை நிலையம் செல்வதற்குப் பெரும் சிரமப்படுகின்றனர். ஊர்காவற்துறையில் தங்கியிருந்தே பரீட்சையை எழுதும் நிலைமை உள்ளது. இந்த மாணவர்களுக்காக விசேட படகு சேவைகளை ஏற்பாடு செய்ய முடியுமா என்றார்.

இதற்கு எழுந்து பதிலளித்த கல்வி அமைச்சரான பிரதமர் ஹரிணி, எழுவைத்தீவிலுள்ள சரவணபவா வித்தியாலயத்தில் 1999இல் இருந்து பரீட்சை நிலையம் இல்லை. குறைந்தளவான மாணவர்கள் இருப்பதாலேயே அங்கு பரீட்சை நிலையத்தை அமைக்க முடியாதுள்ளது. தற்போது அந்த பாடசாலையின் சாதாரண தர மாணவர்கள் ஊர்காவற்துறையில் உள்ள சென்.அந்தனி கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள பரீட்சை. நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

இந்தப் பாடசாலையில் இருந்து 2022இல் பேரும், 2023 இல் 8 பேரும், 2024இல் 5 பேருமே பரீட்சைக்கு தோற்றியுள்ளனர். இதனால் இவர்கள் அருகில் உள்ள பரீட்சை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். அவர்களுக்குரிய போக்குவரத்து சேவைகள் தொடர்பில் அவதானம் செலுத்துகின்றேன் -என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நாடாளுமன்றத்தில் பிரதமர் தவறான தகவல் தெரிவிப்பு

## ரவி கருணாநாயக்க எம்.பி. குற்றச்சாட்டு

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடி இடம்பெற்ற போது மத்திய வங்கி அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமும், வாணிப வங்கி மற்றும் அரச வங்கிகள் அப்போதைய அமைச்சர் கபீர் ஹாசிமிடமும் இருந்தது. அரசுத் தலைவர் விசாரணை ஆணைக்குழு என்னைக் குற்றவாளியாக அறிவிக்கவில்லை. இது தொடர்பில் பிரதமர் நாடாளுமன்றில் கூறிய விடயங்கள் தவறு எனப் புதிய ஜனநாயக முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நிலையியல் கட்டளையின் கீழ் தனிப்பட்ட தெளிவுப்படுத்தலை முன்வைத்து உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எனது உரிமை மீறப்பட்டுள்ளதைப் பற்றிய விடயங்களை வெளிப்படுத்துகிறேன். நிலையியல் கட்டளையின் பிரகாரம் இந்த பாரதூரமான விடயத்தை தெளிவுப்படுத்துகிறேன். இதற்கும் பிரதமருக்கும் இடையில் எவ்வித தொடர்பும் இல்லை என்னைப் பற்றி குறிப்பிட்ட விடயத்தையே தெளிவுப்படுத்துகிறேன்.

2025.11.26 அன்று பிரதமர் ஹரிணி சுமார் ஐந்து வருட காலமாக நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள மத்திய வங்கி பிணைமுறி கொடுக்கல் வாங்கல் மோசடி பற்றிய விடயங்களை முன்வைத்திருந்தார்.

நல்லாட்சிக் காலத்தில் நான் வகித்த அமைச்சு பற்றியும் பிரதமர்குறிப்பிட்டிருந்தார். இதுமுற்றிலும்தவறானமற்றும்எனது புகழுக்கு களங்கம் ஏற்படுத்தும் பாரதூரமான குற்றச்சாட்டாகும். அக்காலக்கட்டத்தில் மத்திய வங்கியானது நிதியமைச்சின் கீழ் இருந்ததாகப் பிரதமர் மறைமுகமாக்கக குறிப்பிட்டிருந்தார். அரசுத் தலைவர் விசாரணை ஆணைக்குழுவில் இவ்வாறு ஏதும் குறிப்பிடப்படவில்லை. சட்டத்தின் 44 ஆவது பிரகாரம் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானிக்கு முரணாகவே பிரதமர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

பிணைமுறி மோசடி இடம்பெற்ற போது நிதியமைச்சராக நான் பதவி வகித்தேன் என்று குறிப்பிட்ட பிரதமர், வாணிப வங்கி தொடர்பில் அதிகாரமுடையவர் நான் என்றும் தெரிவித்திருந்தார். இது முற்றிலும் தவறானது. இந்தக் கருத்தால் எனது பதவிக்கும் களங்கம் ஏற்பட்டுள்ளது.

நிதியமைச்சராக நான் பதவி வகித்த சந்தர்ப்பத்தில் இலங்கை மத்திய வங்கியின் விடயதானம் எனக்கு பொறுப்பாக்கப்படவில்லை. வரலாற்று ரீதியாக மத்திய வங்கி நிதியமைச்சின் விடயதானத்துக்குள்தான் இருந்தது. ஆனால் எனக்கு அந்த விடயதானம் மற்றும் அதிகாரம் வழங்கப்படவில்லை.

நிதியமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் இலங்கை மத்திய வங்கி, நாணய சபை மற்றும் நாணய ஒழுங்குவிதிகளின் தீர்மானமிக்க நபராக நான் செயற்படவில்லை. மத்திய வங்கி மற்றும்நிதிநிலைமைதொடர்பானஅதிகாரம்மற்றும்பொறுப்புகள் அப்போதைய பிரதமர் மற்றும் பொருளாதார கொள்கை அபிவிருத்தி அமைச்சரான ரணில் விக்கிரமசிங்கவிடமே காணப்பட்டது. அமைச்சரவை பத்திரங்கள், வர்த்தமானி அறிவித்தல்கள் மற்றும் சுற்றறிக்கைகள் ஊடாக இதனை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

அதேபோல்அக்காலக்கட்டத்தில்வாணிபவங்கிகள்தொடர்பான அதிகாரம் அப்போதைய அரச முயற்சியாண்மை அமைச்சராக பதவி வகித்த கபீர் ஹாசிமிற்கு பொறுப்பாக்கப்பட்டிருந்தது. இவரின் கீழ்தான் சகல அரச வங்கிகளும் காணப்பட்டன.

அரசுத் தலைவர் விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய விடயங்களை குறிப்பிடுவதாக பிரதமர் சபையில் குறிப்பிட்ட விடயங்கள் முற்றிலும் தவறானது. மத்திய வங்கி பிணைமுறி மோசடி விவகாரத்தில் அரசுத் தலைவர் விசாரணை ஆணைக்குழு என்னை குற்றவாளியாக அறிவிக்கவில்லை - என்றார்.

# பாக். பிரதமர் அனுதாபம்

'தித்வா'சூறாவளியால் ஏற்பட்ட கடுமையான வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் இந்நாட்டு மக்கள் எதிர்கொண்ட பேரிடர் நிலமை குறித்துக் கடந்த சில நாட்களாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உட்பட சர்வதேசத் தலைவர்கள் பலர் அரசுத் தலைவர் அநுரகுமாரவிடம் தமது அனுதாபத்தைத் தெரிவித்ததோடு, இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு அவர்கள் தொடர்ந்து ஆதரவளிப்பதாகவும் உறுதியளித்தனர்.

இந்நிலையில் பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீஃப் , இந்நாட்டு மக்கள் எதிர்கொண்ட உயிர் மற்றும் சொத்து இழப்புகளுடன் கூடிய பேரிடர் நிலைமை குறித்து, நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை இரவு அரசுத் தலைவர் அநுரகுமாரவிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தனது அனுதாபத்தைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன்,இலங்கையைமீளக்கட்டியெழுப்புவதற்கு பாகிஸ்தான் ஆளும்தரப்பு தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீஃப் அரசுத் தலைவர்யிடம் உறுதியளித்துள்ளார்.



## குற்றச்சாட்டுக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தப் பேரிடர் தொடர்பில் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் குறிப்பிடும் குற்றச்சாட்டுக்கள் முற்றிலும் தவறானவை. நவம்பர் 26 அரசுத் தலைவர் நாடாளுமன்றத்தில் தேசிய பேரிடர் முகாமைத்துவச் சபையைக் கூட்டி இந்த பேரிடர் பற்றி எடுத்துரைத்து முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை வழங்கினார்.

தேசியப் பேரிடர் முகாமைத்துவ சபை பேரிடருக்கு முன்னர் கூடவில்லை என்று எதிர்க்கட்சியினர் குறிப்பிடுவது முற்றிலும் தவறானது. கடந்த ஜூலையில் அரசுத் தலைவரின் தலைமையில் அரசுத் தலைவர் செயலகத்தில் பேரிடர் முகாமைத்துவ சபை கூடியது .7 ஆண்டுகளுக்கு பின்னரே இந்தச் சபை கூட்டப்பட்டது. இன்று பேரிடர் பற்றி ஆளும்தரப்பைக் குறை சொல்லும் தரப்பினரது நிலையை இதனூடாக விளங்கிக் கொள்ளலாம்.

பேரிடரின்போது மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான ஹெலிக்கொப்டர்கள் இருக்கவில்லை. இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளின் உயராணையர்களிடம் கலந்துரையாடி ஹெலிக்கொப்டர்களைபெற்றுக்கொண்டோம்.

சுனாமியின் பின்னர் அரச நிதியை மோசடி செய்த குடும்பத்தினர் இன்று பொதுமக்களுக்கு உதவியளிப்பது பற்றிப் பேசுவது வேடிக்கையாகவுள்ளது. மதம் அச்சுறுத்தல் என்று குறிப்பிட்டுக் கொண்டு வீதிக்கு இறங்கியவர்கள் மக்களின் உயிர் அச்சுறுத்தலுக்குள்ளானபோது தலைமறைவாகிவிட்டார்கள். ஒரு சில அரசியல்வாதிகளின் கீழ்த்தரமான செயற்பாட்டை கண்டு வெட்கமடைகிறோம். மீட்புப் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகிறது. வெகுவிரைவில் அபிவிருத்திப்பணிகளுக்கானநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றார்.

## பொருள்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உபாலி பன்னிலகே தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பெருந்தோட்டத்துறை, சமூக உட்கட்டமைப்பு அமைச்சு, வர்த்தகம்மற்றும்உணவுபாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதி , திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பேரிடரின்போது எமது மக்கள் பிறருக்கு உதவி செய்துள்ளார்கள். நாம் நமக்கு என்ற கொள்கைக்குஅமைய எம்மக்கள்செயற்பட்டது வரவேற்கத்தக்கது. இக்கட்டான நிலமையை விளங்கிக் கொண்டு மக்கள் செயற்படும் போது எதிர்க்கட்சியினர் அரசியல் இலாபம் தேடிக் கொள்வதற்கு வெறும் குற்றச்சாட்டுக்களை மாத்திரம் முன்வைப்பது வெறுக்கத்தக்கது.

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணமளிப்பதற்கும், அவர்களின் வாழ்வாதாரத்தை வழமைக்கு கொண்டு வருவதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்குப் புதிய திட்டங்கள் செயற்படுத்தப்படும்.

நாடு எதிர்கொண்டுள்ள மிக மோசமான நெருக்கடிக்கு மத்தியில் அதிக விலைக்கு உணவு பொருட்களை விற்பனை செய்தால் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அதற்குரிய ஆலோசனைகள் உரிய தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்நிலையில் அதிக இலாபமடைவதற்காக அதிக விலைக்கு அத்தியாவசிய பொருட்களை விற்பனை செய்வதை வியாபாரிகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். சகல தரப்பினர் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும் - என்றார்.

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனி அங்கீகாரம் வழங்குவதில் என்ன தடை இருக்கிறது? தமிழர் வரலாற்றின் இலட்சினைகள், கல்வெட்டுக்கள், ஓலைகள் இந்நாட்டில் பாதுகாப்பாக பேணப்படுகின்றதா? சங்கிலியன், பண்டாரவன்னியன் நல்லநாச்சி, எல்லாளன் போன்ற மன்னர்களின் வரலாறுகளைத் தமிழ், வரலாறு, சித்திரப் பாடங்களில் இருப்பதைத் தங்களால் உறுதிப்பாடு தரமுடியுமா? என்று சிறீதரன் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் தெரிவித்ததாவது:

10 ஆம் தரத்தில் 7 ஆவது பாடத்தில் யாழ்ப்பாணம் மற்றும் வன்னியர்கள் தொடர்பில் பந்தி பிரிக்கப்பட்டும், அதேபோல் 10 ஆம் தரத்தில் 10 ஆவது பாடத்தில் யாழ்ப்பாண இராஜதானி தொடர்பான பந்தி வேறுபடுத்தப்பட்டும் உள்ளன. அதில் சங்கிலி மன்னன் இராஜ்ஜியம் தொடர்பான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

புதிய கல்விச் சீர்திருத்தத்தில் தரம் 6 க்கான பாடப்பரப்பில் சங்கிலி மன்னன் தொடர்பான வரலாறு மற்றும் மன்னனின் அரச மாளிகை தொடர்பான படங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. வரலாறு ஒருபாடமாக கற்பிக்கப்படுகின்றதே தவிர மாணவர்கள் மத்தியில் சிங்கள வரலாறு, தமிழ் வரலாறு என்று வேறுபடுத்திக் கற்பிக்கப்படவில்லை.

இலங்கையின் வரலாற்றை பாதுகாத்தல் மற்றும் காட்சிப்படுத்துவதற்காக தேசிய தொல்லியல் திணைக்களம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதற்கமைய தமிழில் வரலாறு மேம்பாட்டுக்கான விசேட நடவடிக்கைகளை இத்திணைக்களம் மேற்கொண்டுள்ளது. கொழும்பு தேசிய நூதன சாலையில் தமிழ் வரலாறு தொடர்பான் காட்சிப்படுத்தலும் உள்ளன.

இந்திய மன்னர்களான இராஜ ராஜ சோழன், இராஜேந்திர சோழன், உட்பட தமிழ் அரசர்களின் வரலாறுகளையும் இவை பிரதிபலிக்கின்றன. அதேபோல் இந்து மதத்திற்குரிய சிவன், பார்வதி, நடராஜர், சுந்தரமூர்த்திநாயனார் உட்பட பெரும்பாலான மூர்த்திகளின் உருவச் சிலைகள் கொழும்பு நூதனசாலையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அதேபோல் யாழ்ப்பாண இராஜ்ஜியத்தில் பயன்படுத்தப்பட்ட நாணயங்கள் தேசிய நூதன சாலையில் பாதுகாக்கப்படுகின்றன.

சங்க காலம், மற்றும் சோழ, பாண்டிய காலங்களில் பயன்படுத்தப்பட்ட நாணயங்கள் தொடர்பில் பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி, செனரத் விக்கிரமசிங்க ஆகியோரினால் படைக்கப்பட்ட நூலும் தேசிய நூதனசாலையில் பாதுகாக்கப்படுகின்றது

அதேபோல் சித்திரம், கலை, கலாசாரம் தொடர்பில் புதிய கல்வி மறுசீரமைப்பில் விசேட முன்னுரிமை வழங்கப்படும். விடய பாடத் திட்டங்கள் தயாரிக்கப்படும்போது பல்லின சமூகம், மதம் கலை, கலாசாரங்களை உள்ளடக்கிய வகையில் சர்வதேச தரப்படுத்தலுக்கு அமையவே அவை தயாரிக்கப்படுகின்றன. இதற்கமைய சித்திரக்கலை கல்வி மறு சீரமைப்பின்போது குறிப்பிடத்தக்க விடயங்கள் குறித்து விசேட கரிசனை கொள்ளப்படும்.

குறிப்பாக கலைக் கல்வியில் பாரம்பரிய மற்றும் நவீன கலை, கலாசாரங்கள் குறித்து விசேடமுன்னுரிமைவழங்கப்படும். பாரம்பரிய கலை நிர்மாணிப்புக்களினால் இலங்கை, இந்தியா மற்றும் ஐரோப்பியா உள்ளிட்ட பல்வேறுபட்ட காலகட்டத்திலும் படைக்கப்பட்ட கலைப்படைப்புக்கள் மற்றும் மரபுரிமைகள் தொடர்பான இலட்சினைகள் புதிய கல்வி மறு சீரமைப்பில் உள்ளடக்கப்படும்.

உதாரணமாக இந்தியாவில் இந்து நாகரீகத்திலிருந்து குப்த, பல்லவ ,சோழ, மொகாலய மற்றும் எகிப்து உள்ளிட்ட காலகட்டங்களில் அடையாளப்படுத்தப்பட்ட கலை, கலாசாரங்கள் பாதுகாக்கப்பட்டு அவை புதிய கல்வி மறு சீரமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதேபோல் தென்னிந்தியாவின் கலைப் படைப்புகளுடன் ஒத்தபொலன்னறுவைசிவன்கோவில் இந்துக் கடவுள்சிலைநிர்மாண வடிவமைப்பு அதனை ஒத்த பௌத்த மத கலை நிர்மாணிப்புகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மாறுபட்ட கலை அம்சங்களும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

பிரதான கலைப் படைப்புக்களை ஆய்வு செய்கையில் கலைச் சிற்பிகளாகக் கருதப்படும் தாவடி முத்தையா துரைசாமி ,பெரியநம்பி சுப்பிரமணியம், கனகசபாபதி, சிவஞானசுந்தரம் (ரமணி ) உள்ளிட்ட கலைஞர்களின் நிர்வாண படைப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. தமிழ், சிங்களம், முஸ்லிம், கிறிஸ்தவம் என்று வேறுபடுத்தாமல் இலங்கை கலை நிர்மாணம் மற்றும் கலைஞர்கள் என்று விரிவுபடுத்துவதே புதிய கல்வி மறுசீரமைப்பின் நோக்கம்.

புதியகல்விமறுசீரமைப்பில்தயாரிக்கப்படும் சித்திரக்கலை பாடப்பரப்பில் (பாடப்பரப்பு, விடயதானங்கள், ஆசிரியவழிகாட்டல்கள்) மீள் பரிசீலனை செய்ய மீளாய்வுச் சபைக்காக சித்திர பாடத்திற்குரிய நிபுணர்களை உள்ளடக்கம் செய்து மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றார்.

## புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்கள் வரலாறு திட்டமிட்டே மறைக்கப்பட்டுள்ளது. புதிய கல்விச் சீர்திருத்தத்தில் இந்த தவறு திருத்தப்படுமா என தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத்தலைவரும்யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிறிதரன் பிரதமரிடம் கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின் போது நிலையியற் கட்டளை 27/2 இன் கீழ், பிரதமரும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சருமான ஹரிணியிடம்தனியானகூற்றைமுன்வைத்து உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் சிங்கள மக்களைப்போல் தமிழர்களும் வரலாற்று அடிப்படைகளைக் கொண்ட, இந்த மண்ணுக்குப் பூர்வீகமான சொந்த உரித்துக்கொண்ட தேசிய இனம். விஜயனும் தோழர்களும் இந்த நாட்டுக்கு வரும் முதலே பஞ்ச ஈச்சரங்களுடன் நாகர்களாக, இயக்கர்களாக தமிழர்கள் ஈழத்து மண்ணில் வாழ்ந்து வந்தார்கள் என்பதை, மகாவம்சம் முதல் ஆய்வாளர்கள் வரை குறிப்பிடுகிறார்கள்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோர் இந்த மண்ணை வன்வழைப்பு செய்து அதிகார ஆட்சி செய்தபோதும் தமிழர்கள் தீரத்துடன் அவர்களுக்கு எதிராகப் போராடியுள்ளார்கள். குறிப்பாக வடக்கு கிழக்கு மண்ணில் அரசுகள் அமைத்து சங்கிலியன், பண்டாரவன்னியன், பரராஜசேகரன் போன்ற மன்னர்கள் தீரத்துடன் தாயக தேசத்திற்காகப் போராடியுள்ளனர். நல்லநாச்சி போன்ற பெண் சிற்றரசர்களும் இந்த மண்ணின் விடுதலைக்காக போராடித் தங்களை அர்ப்பணித்தவர்கள். 1920ஆம் ஆண்டுக்கு பின்னர் அநாகரிக தர்மபால, ஜாவா போல ஆறுமுகநாவலரும் சைவத்தையும், தமிழையும் பாதுகாக்கவும், வளர்க்கவும் போராடியுள்ளார்.

ஆனால், இலங்கையில் உள்ள கல்வி அமைச்சின் பாடத் திட்டங்களில் தமிழர் வரலாறு திட்டமிட்டே மறைக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. வரலாறு, சித்திரம் போன்ற பாடங்களில் தமிழ் மன்னர்களின் பெயர்கள், அக்கால இலச்சினைகள்,கல்வெட்டுக்கள், திட்டமிட்டே மறைக்கப்பட்டுள்ளன. 1970களில் தமிழ்,வரலாற்று பாடநூல்களில் தமிழரின் வரலாறுஓரளவுக்கேனும்குறிப்பிடப்பட்டிருந்தது. 1982களில் இலவச பாடநூல் வழங்கும் திட்டம் உருவாக்கப்பட்டபின் தமிழர்கள் வரலாறு திட்டமிட்டே மறைக்கப்பட்டும், அழிக்கப்பட்டும் வந்துள்ளதைக் காணமுடிகிறது.

போர்க் காலங்களை பயன்படுத்தி சங்கிலியன், பண்டாரவன்னியன், நல்லநாச்சி, எல்லாளன் போன்ற தமிழ் மன்னர்களின் வரலாறுகள் இல்லாதழிக்கப்பட்டுள்ளதை அமைச்சர் அறிவாரா? இலங்கையின் விடுதலையில் தீரத்துடன் போராடிய தமிழ் மன்னர்களின் வரலாறு பாட நூல்களில் உட்புகுத்தப்படுமா? கல்வித் திட்டத்தில் வரலாற்றுப் பகுதியில் தமிழர் வரலாற்றுக்குரிய தனி அங்கீகாரம் வழங்குவதில் என்ன தடை இருக்கிறது?

தமிழர் வரலாற்றின் இலட்சினைகள், கல்வெட்டுக்கள், ஓலைகள் இந்நாட்டில் பாதுகாப்பாக பேணப்படுகின்றதா? சங்கிலியன்,பண்டாரவன்னியன் நல்லநாச்சி, எல்லாளன் போன்ற மன்னர்களின் வரலாறுகளை தமிழ், வரலாறு, சித்திரப் பாடங்களில்இருப்பதற்குதங்களால்உறுதிப்பாடு தரமுடியுமா? என்று கேள்வியெழுப்பினார்.

## உயிரிழப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிவாகியுள்ளன. இம்மாவட்டத்தில் 89 பேர் உயிரிழந்துள்ளதோடு, 73 பேர் காணாமல் போயுள்ளனர். இதேவேளை பதுளையில் 83 பேர் உயிரிழந்துள்ளதோடு, 28 பேர் காணாமல் போயுள்ளனர். குருணாகல் மாவட்டத்தில் 56 பேர் உயிரிழந்துள்ளதோடு, 23 பேர் காணாமல் போயுள்ளனர். மாத்தளை மாவட்டத்தில் 28 பேர் உயிரிழந்துள்ளதோடு மேலும் இருவர் காணாமல் போயுள்ளனர். கேகாலையில் 30 பேர் உயிரிழந்துள்ளதோடு, 41 பேர் காணாமல் போயுள்ளனர்.

அந்த வகையில் நாடளாவிய ரீதியில் 455 405 குடும்பங்களைச் சேர்ந்த 1 614 790 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 188 974 பேர் 1347 தற்காலிக பாதுகாப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் பேரிடர் முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. அத்தோடு நாடளாவிய ரீதியில் 1289 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளதோடு, 44 556 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### மீட்பு பணிகள்

நுவரெலியா மாவட்டத்தில் உலங்கு வானூர்திகள் மூலம் சென்ற படையினரால் மீட்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய கொத்மலை, நுவரெலியா, நம்பொடை, மீமுர, கம்பளை, நாவலப்பிட்டி, பன்னில, பாலுவத்த மற்றும் மந்தானம்நுவர உள்ளிட்ட பிரதேசங்களில் சிக்கியிருந்த 288 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் வருண கமகே தெரிவித்தார்.

கொத்மலையில் காணாமல் போன 50 பேரில் 9 பேரின் சடலங்கள் மாத்திரமே மீட்பு

நுவரெலியா - கொத்மலை, மாவத்துர மற்றும் கொஸ்வத்த பிரதேசங்களில் ஏற்பட்ட மண்சரிவுகளில் சிக்கி காணாமல் போன சுமார் 50 பேரில் 9 பேரது சடலங்கள் மாத்திரமே இதுவரையில் மீட்கப்பட்டுள்ளன. நாவலப்பிட்டி - தொலஸ்பாகே , பாரகல பிரதேசத்தில் மண்சரிவில் சிக்கி உயிரிந்த மேலும் 8 பேரது சடலங்கள் நேற்றைய தினம் மீட்கப்பட்டுள்ளன. காணாமல் போயுள்ள மேலும் ஐவரைத் தேடும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாடாளுமன்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில்வா ஆளும்தரப்பிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பெருந்தோட்டத்துறை, சமூக உட்கட்டமைப்பு அமைச்சு, வர்த்தகம்மற்றும்உணவுபாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதி , திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2025ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி செலவழிக்கப்படவில்லை. ஆகவே அந்த நிதியை தற்போதைய அவசர நிலைக்கு பயன்படுத்த முடியும். சேதடைந்துள்ள வீடுகள் மற்றும் பாலங்களை சீரமைக்க 30 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 20 பில்லியன் ரூபாவை பிறிதொரு வழியில் பெற்றுக்கொள்ளலாம். ஆகவே எதிர்வரும் 4 வாரத்துக்கு செலவு செய்வதற்கு போதுமான நிதி ஆளும்தரப்பிடம் உள்ளது.

நிதி விடுவிப்புக்குத் தேவையான சுற்றறிக்கைகளைத்தயாரிப்பதற்குஆளும்தரப்புக்கு எவ்வித தடையும் கிடையாது. பாதிக்கப்பட்டுள்ள வீடுகளை துப்பரவு செய்வதற்கு குறைந்தபட்சம் 50 ஆயிரம் ரூபாவேனும் வழங்க முடியும். 25 ஆயிரம் வழங்குவதாக குறிப்பிடப்படுகிறது. இந்தத் தொகை எந்தளவுக்கு போதுமானதாக அமையும்.

பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணமளிக்க நிதி நெருக்கடி ஏதும் கிடையாது. 2026 ஆம் ஆண்டுதான் நிதி நெருக்கடி ஏற்படும். நாணய நிதியத்தின் பரிந்துரைக்கு அமைய அரச செலவினங்கள் வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனாலும் தற்போதைய நெருக்கடியான நிலமையை கருத்திற் கொண்டு அரச செலவினத்தை 300 முதல் 500 பில்லியன் ரூபா வரையில் அதிகரித்துக் கொள்ளும் யோசனையை ஆளும்தரப்பு நாடாளுமன்றத்துக்கு கொண்டு வந்தால் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

இலங்கையை மீளக்கட்டியெழுப்பல் என்ற நிதியம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அரச பொது நிதிச் சட்டத்தின் 148 ஆவது பிரிவின்படி நாடாளுமன்றத்தின் அனுமதி இல்லாமல் பொது நிதியம் ஒன்றை உருவாக்க முடியாது. செய்வதை சட்டத்தின் பிரகாரம் செய்யுங்கள், ஏனெனில் செலவு செய்யும் ஒவ்வொரு ரூபாவுக்கும் பொறுப்புக் கூறவேண்டும். இந்த நெருக்கடியான நிலையில் இருந்து நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாப்பதற்கும் மீட்பதற்கும் எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு நாங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

## பேரிடர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் சாணக்கியனின் மக்கள் அமைப்பின்ஊடாகஇந்தநிவாரணப்பொருட்கள் வழங்கும்பணிகள்ஆரம்பித்துவைக்கப்பட்டன

இதன்முதல் கட்டமாக களுவாஞ்சிகுடி பகுதியில் கடுமையான பாதிப்புகளை எதிர்கொண்ட சுமார் 1000பேருக்கான நிவாரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

நாடாளுமன்றஉறுப்பினர்சாணக்கியனின் தலைமையில் களுவாஞ்சிகுடியில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அரசுத் தலைவர் சட்டத்தரணி சுமந்திரன் கலந்துகொண்டார்.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேசசபையின் தவிசாளர் வினோராஜின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற இந்த உதவி வழங்கும்வேலைத்திட்டத்தில் போரதீவுப்பற்ற பிரதேசசபையின் தவிசாளர் மதிமேனன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

முதல் கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த நிவாரண வேலைத்திட்டத்தின் ஊடாக கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுக்கப்படவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்தார்.

அங்கு பேசிய சுமந்திரன் தெரிவித்ததாவது:

மலையகத்திற்கு விஜயம்செய்தபோது பல பரிதாபகரமான சம்பங்கள் தொடர்பில் அறிந்துகொண்டோம். சில இடங்களில் முழு கிராமமுமே புதையுண்ட நிலை காணப்படுகின்றது.அந்த நேரத்தில் வீடுகளில் இல்லாத சிலர் தப்பி பிழைத்துள்ளனர். அங்கிருந்த ஒருவர் தனது முழுக் குடும்பமுமே புதையுண்டுள்ளதாகவும் மீட்பு நடவடிக்கைகளுக்குயாரும்வரவில்லை,மூன்று நாட்களாகஎப்படியாவதுதமதுகுடும்பத்தினரின் உடல்களை மீட்கவேண்டும் என போராடி வருகின்றார் என்று தெரிவித்தார். அங்கு சிலர் தமது பணத்தினைக்கொடுத்து டீசல், இயந்திரங்களை எடுத்து தேடும் பணிகளை முன்னெடுத்திருந்தனர்.

இதில் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் நிவாரணப் பணிகளில் அனைவரும் கட்சி பேதங்கள் கடந்து அனைவரும் ஒன்றிணையவேண்டும் என ஆளும்தரப்பும் சொல்கின்றது நாங்களும் கூறுகின்றோம்அனைவரும்கூறுகின்றார்கள். ஆனால் இந்த விடயங்களில் ஏனைய கட்சிகளைபுறந்தள்ளிவைப்பதில்ஆளும்தரப்பு மும்முரமாகசெயற்படுவதுவெளிப்படையாகத் தெரிகின்றது.

நேற்றை தினம் கண்டி மாவட்டச் செயலரைச் சந்தித்தபோது கம்பளை பகுதியில் 19பேர்தான் உயிரிழந்துள்ளனர் என்று சொல்கின்றார். நாங்கள் சென்ற முதல் இடத்திலேயே 26 உடல்கள் தோண்டியெடுக்கப்பட்டுள்ளன. இன்னும் 50க்கும்மேற்பட்டவர்கள்புதையுண்டுள்ளனர் என்று கிராமத்து மக்கள் தெரிவிக்கின்றனர். அவ்வாறு பல கிராமங்கள் பேரழிவுக்கு உள்ளாகியுள்ளது.அந்த பகுதிகளில் மக்கள் சென்று மீள வாழமுடியாத வகையில் பேரிடர் இடம்பெற்றுள்ளது.

நேற்றுநாங்கள்சென்றபதுளைமாவட்டம், நுவரெலியாமாவட்டங்களில்பெரும்இழப்புகள் ஏற்பட்டுள்ளதைக்காணமுடிகின்றது.அங்குள்ள மக்கள் எங்களைக்கண்டதும் கண்ணீருடன் தமது கஸ்டங்களை கூறினார்கள். அப்பகுதியில் உடனடி நிவாரணப்பணிகள் முன்னெடுக்கப்படாததை மக்கள் மூலம் அறியமுடிந்தது. இதனை நாங்கள் கூறைகூறவேண்டும் என்பதற்காக சொல்லவில்லை. ஆளும்தரப்பினைக் குறைகூறுவதற்காகஇதனைச்சொல்லவில்லை. மக்களுக்கு உடனடி நிவாரணங்கள் சென்றடையவேண்டும், மக்களின் உயிரிழப்புகள் எத்தனையென்பது தெளிவாக தெரியவேண்டும். உண்மையினை முழுப்புசணிக்காயை சோற்றுக்குள் மறைக்கமுடியாது.

நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழந்திருக்கின்றபோது முகத்தினை இறுக்கமாக வைத்துக்கொண்டு பத்து பதினைந்துபேர்தான் உயிரிழந்துள்ளார்கள் என ஆளும்தரப்பு பதில் சொன்னால் அதனை நாங்கள் ஏற்றுக்கொள்ளமுடியாது. இந்தவேளையில் ஆளும்தரப்பிற்கு எதிராக பேசக்கூடாது என்ற தோரணையில் எவரும் எங்களை விமர்சிக்ககூடாது.உண்மை வெளிவந்தால்தான் நிவாரணப்பணிகளும் சரியானமுறையில் நடைபெறும்.

விசேடமாக ஊடகங்கள் இதனை விமர்சிப்பதை பார்க்கமிகவும் அருவறுப்பாக இருக்கின்றது.செய்தியை பிரசுரிப்பதுதான் அவர்களின் வேலையாக இருக்கவேண்டுமே தவிர செய்திகளின் பின்பக்கமான கிரிக்கட் வர்ணணை போன்று தமது விமர்சனங்களை முன்வைப்பது அருவறுக்கத்தக்க செயலாகும்.

இந்தப் பேரிடர் எவ்வளவு பெரிய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என்பது தெரியாமல் அவர்கள் அரசியல் செய்துகொண்டிருப்பதை காணமுடிகின்றது. இந்த நேரத்தில் அனைத்து அரசியல் கட்சிகளும் இணைந்துதான் மக்களைக் காப்பாற்றவேண்டும். இந்த ஆளும்தரப்புடன் இணைந்து செயற்படுவதற்கு நாங்கள் தயாராகயிருக்கின்றோம்என்றுகூறுகின்றோம்.

சுனாமி பேரிடர் வந்தவேளையில் அன்றைய ஆளும்தரப்பு வடகிழக்கில் விடுதலைப்புலிகளுடன் இணைந்து கட்டமைப்பினை ஏற்படுத்தியது. அந்தப் பிரதேசங்களிலே ஆளுகை செய்தவர்கள் அவர்கள். அந்தவேளையில் அதனைத் தடுப்பதற்கு நீதிமன்றபடியேறிய ஜேவிபியினருடன் இணைந்து வேலைசெய்வதற்கு நாங்கள் தாயராகயிருக்கின்றோம் என்றால் வேறு யாருடன்நாங்கள்சேர்ந்துசெயற்படமாட்டோம்? அனைவருடமும் இணைந்து நாங்கள் செயற்படுவோம் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# தொலைத்தொடர்பு சேவைகள் இன்று வழமைக்குத் திரும்பும்

## பிரதி அமைச்சர் நாடாளுமன்றில் தெரிவிப்பு



பேரிடர் காரணமாக தடைப்பட்ட தொலைபேசி மற்றும் இணையத் தொடர்பு வலையமைப்புகள் இன்று வியாழக்கிழமை முழுமையாக மீட்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்கா வீரரத்ன தெரிவித்துள்ளார். சேவைகளை மீட்டெடுக்க டிஜிட்டல் பொருளாதாரம் அமைச்சு, தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் அனைத்துத் தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்களும் அயராது உழைத்து வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மண்சரிவுகள் மற்றும் வெள்ளப் பெருக்கு காரணமாக, மாகாண பைபர் இணைப்புகள் 11 இடங்களில் தடைப்பட்டன. அமைச்சின் நேரடித் தலையீட்டின் மூலம், அவற்றில் 9 இடங்களில் 24 மணி நேரத்திற்குள் சேவைகளை மீட்டெடுக்க முடிந்தது. தற்போது, அனைத்து மாகாண இணைப்புகளும் செயல்பாட்டில் உள்ளன, தொலைத்தொடர்பு சேவைகளின் தொடர்ச்சியை உறுதிசெய்கின்றன.

இடைநிலை மையங்கள் பாதிக்கப்பட்டிருக்கும் இடங்களில், மாற்று பைபர் பாதைகள் மூலம் சமிக்கைகள் நிர்வகிக்கப்படுகின்றன. வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் ஏற்பட்ட மின் தடைகள் மற்றும் பைபர் துண்டிப்புகள் காரணமாக 4,000 க்கும் மேற்பட்ட பிரதான பரிமாற்ற கோபுரங்கள் செயலிழந்தன. இவற்றில், சுமார் 2,800 தற்போது மீட்கப்பட்டுள்ளன. எஞ்சிய 949 கோபுரங்கள் முக்கியமாக மின்வெட்டு காரணமாக செயலிழந்துள்ளன. இவற்றை விரைவில் மீட்டெடுக்க தொலைத்தொடர்பு வழங்குநர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நெருக்கமாகப் பணியாற்றி வருகின்றனர்.

தொலைத்தொடர்பு கோபுரங்களை விரைவாக அடைவதற்கும் தேவையான மின் ஆதரவை வழங்குவதற்கும் முப்படையினர் அதிகபட்ச உதவிகளை வழங்குகின்றனர். நவம்பர் 28 பேரிடர் ஏற்பட்டபோது பொதுமக்கள் மொபைல் வலையமைப்புகளுடன் இணைவதில் ஆரம்பத்தில் சிரமங்களைஎதிர்கொண்டாலும், குறுஞ்செய்தி திறனை செயல்படுத்த தேவையான தொழில்நுட்பத்தை நாம் தயார் செய்தோம். இருப்பினும், நவம்பர் 29ஆம் திகதிக்குள் கணிசமான பைபர் இணைப்புகள் மீட்கப்பட்டதால், இந்தத் தேவை ஏற்படவில்லை.

தற்போது, நுவரெலியா, பதுளை, புத்தளம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் பிரதானமாக சிக்கல்கள் நீடிக்கின்றன. அவற்றில், நுவரெலியா மற்றும் கண்டி ஆகியவை அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. நாளைய தினத்திற்குள், நுவரெலியா மற்றும் புத்தளத்தில் 75 சதவீதத்துக்கும் அதிகமான இணைப்பு மீட்கப்படும் என்று எதிர்பார்க்கிறோம். அதேபோல், கண்டியில் தற்போதுள்ள 65 சதவீதத்திலிருந்து சுமார் 70 சதவீதமாக மீட்டெடுப்பை அதிகரிக்க இலக்கு வைத்துள்ளோம்.

பொதுமக்கள் தகவல்களைப் பெறுவதற்கும், தங்கள் அன்புக்குரியவர்களுடன் தொடர்பைப் பேணுவதற்கும் தொடர்பு அத்தியாவசியமானது. நாங்கள் ஏற்கனவே 80 சதவீதத்துக்கும் அதிகமான துண்டிப்புகளைத் தீர்த்துவிட்டோம். நாளைக்குள் முழுமையாக மீட்டெடுப்பை அடைய முடியும் என்று நாம் நம்புகிறோம் என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

### பாதிக்கப்பட்ட மக்களுக்கு

# உச்சளவில் உதவியை வழங்க ஆளும்தரப்பு நடவடிக்கையாம்

சுற்றிக்கைகளுக்குள் மட்டுப்படுத்தாமல் பேரிடர்ங்களினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உச்ச அளவில் உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது. அத்துடன் பேரிடர்த்திற்குப் பின்னர் மீண்டும் இந்த நாட்டைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் உபாலி பன்னிலகே தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு, வர்த்தக வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு மற்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பேரிடர்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாம் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். கடந்த சில தினங்களாக நாட்டில் ஏற்பட்ட இயற்கைப் பேரிடர்களில் 22 மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் நேரடியான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

பாதிப்புக்குள்ளான அந்த மக்களின் இயல்பு வாழ்க்கையை தோற்றுவிப்பதற்காக ஆளும்தரப்பு, அரச அதிகாரிகள் ஆளும் கட்சி எதிர்க்கட்சி என்ற பேதங்கள் இல்லாமல் அனைவரும் இரவு பகல் பாராமல் தமது அர்ப்பணிப்புள்ள சேவையை வழங்கியுள்ளனர். அனைவருக்கும் நாம் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பேரிடர்நிலைதொடர்பில்அறிந்தநிமிடம்முதலேபாதிப்புகளை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அத்துடன் பாதிப்புகளை மீளக் கட்டியெழுப்புவதற்கு ஆளும்தரப்பு மீள் புனரமைப்புத் திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. அதற்காக பல்வேறு சர்வதேச நாடுகளும் எமக்கு ஒத்துழைப்புக் களை வழங்கி வருகின்றன. அவர்களுக்கு நாம் எமது நன்றியை தெரிவித்துக்கொள்வதோடுஅனத்தங்களின்பின்னர்நாட்டிலுள்ள வர்த்தகர்கள் உள்ளிட்ட தரப்பினர் தமது ஒத்துழைப்புகளை வழங்கி வருகின்றமைக்கும் நன்றி தெரிவிக்கின்றோம்.

நாட்டைமீண்டும்ஒருமுறைகட்டியெழுப்பவேண்டியுள்ளது. இந்த நடவடிக்கைகளில் அரசுத் தலைவர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை எடுப்பதுடன் நிவாரணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உதவிகளைப்பெற்றுக்கொடுக்கும்போதுநடைமுறையிலுள்ள சுற்று நிற்றறிக்கைகளை கவனத்திற் கொள்ளாது மக்களுக்கு உரிய வகையில் அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

உதவி வழங்கும் நடவடிக்கைகளில் சுயாதீனமாக பல தரப்பினர் செயற்பட்டு வருகின்றனர்.பாதிக்கப்பட்டுள்ள வீதிகள், பாலங்கள் உள்ளிட்ட அனைத்தையும் மீண்டும் சீரமைக்க வேண்டியுள்ளது. அது பாரிய வேலைத்திட்டமாகும். நாம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கும் உதவித்தொகையை மேலும் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். அந்த நிதியை 25,000 ரூபாவாக வழங்குவதற்கு ஆளும்தரப்பு தீர்மானித்துள்ளது.

பேரிடர் காலங்களில் அத்தியாவசியப் பொருட்களை அதிகரித்த விலைக்கு விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிய முடிகிறது. நாம் அதற்கு ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை.

எனவே பேரிடர்த்திற்குப் பின்னர் மீண்டும் இந்த நாட்டைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும். இந்த நாடு மீண்டும் ஒரு முறை பொருளாதார நெருக்கடியில் வீழ்வதற்கு இடமளிக்காமல் பொருளாதாரம் சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்யப்படும் என்றார்.

# தொழிற்றுறைகளின் வங்கிக் கடனை அடைக்க மேலதிக அவகாசம் தேவை

### தயாசிறி எம்பி. வலியுறுத்து

பேரிடரால் தொழிற்றுறைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இவர்களின் வங்கிக் கடன் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி கடனைத் திருப்பி செலுத்துவதற்கு மேலதிக காலம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் பெருந்தோட்டத்துறை, சமூக உட்கட்டமைப்பு அமைச்சு, வர்த்தகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதி , திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்ட இயற்கை பேரிடரால் ஏற்பட்ட பாதிப்புக்கள் மற்றும் உயிரிழப்புக்களையிட்டு பெரும் வேதடையடைந்துள்ளோம். நாட்டின் சகல பிரதேச செயலக பிரிவுகளும் ஒரே சமயத்தில் பாதிக்கப்பட்ட ஒரு பேரிடராகவே இது காணப்படுகிறது.

2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க பேரிடர் முகாமைத்துவ சட்டத்தின் பிரகாரம் செயற்பட்டதா என்பதில் பெரும் சந்தேகம் காணப்படுகிறது. சர்வதேச மட்டத்தில் தேர்ச்சிப் பெற்ற அதிகாரிகள் பேரிடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தில் இருந்து நீக்கப்பட்டார்கள். ஆளும்தரப்பு தனக்கு தேவையானவர்களை நியமித்தது.

2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தேசிய பேரிடர் முகாமைத்துவ நிவாரண சேவை ஊடாக சகல பிரதேச செயலகங்களுக்கும் படகு மற்றும் உயிர்காக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. இந்த ஆளும்தரப்பு பேரிடர் முகாமைத்துவத்துக்காக எவ்வித முன்கூட்டிய நடவடிக்கைகளையும் கடந்த ஒருவருடகாலமாக மேற்கொள்ளவில்லை.

குளியாப்பிட்டிபகுதியில்வெள்ளபேரிடர்ஏற்பட்டபோதுபிரதேச செயலகபிரிவில்இருந்துபடகுகள்இயங்கவில்லை.மீனவர்களின் படகுகளை பெற்றுக்கொண்டு மீட்பு பணிகளில் ஈடுபட்டோம். புயல் மற்றும் வெள்ளம் தொடர்பில் காலநிலை ஆராய்ச்சி மையம் ஆளும்தரப்புக்கு முன்கூட்டியதாகவே எச்சரிக்கை விடுத்துள்ளது. ஆனால் அந்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஆளும்தரப்பு எடுக்கவில்லை.இது கவலைக்குரியது.

வெள்ளம்பெருக்கெடுத்ததன்பின்னரேமிகவும்தாமதமான நிலையில் பிரதான நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டன.இதனால் தான் பெருமளவிலான பகுதிகள் வெள்ள நீரில் மூழ்கின.இந்த நெருக்கடியான நிலையில் எதிர்க்கட்சிகள் ஆளும்தரப்பை நெருக்கடிக்குள்ளாக்கவில்லை. முழுமையான ஒத்துழைப்பு வழங்கியுள்ளோம்.

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு ஆளும்தரப்பு விரைவாக உதவியளிக்க வேண்டும். பெரும்பாலானவர்களின் தொழிற்றுறைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இவர்களின் வங்கிக் கடன் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி கடனைத் திருப்பி செலுத்துவதற்கு மேலதிக காலம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

# ஐ.நாவும் தோளோடு தோள் நிற்கிறது

இலங்கை உள்ளிட்ட நாடுகளில் ஏற்பட்ட பேரிடர்ங்களினால் பாதிக்கப்பட்ட சகல குடும்பங்களுடனும் தாம் தோளோடு தோள் நிற்பதாகத் தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரெஸ், பாதிக்கப்பட்டோருக்கான நிவாரண மற்றும் மீளக்கட்டியெழுப்பல் முயற்சிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளார்.

'தித்வா' சூறாவளி காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு பேரிடர்ங்களில் பல நூற்றுக்கணக்கானோர் பலியாகியிருப்பதுடன், இலட்சக்கணக்கானோர் தமதுஇருப்பிடங்களையும்வாழ்வாதாரத்தையும் இழந்து வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இலங்கைக்கு சர்வதேச நாடுகள், அரச சார்பற்ற அமைப்புக்கள், வணிக நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் உதவிகளை வழங்கிவருகின்றனர்.

இந்நிலையில்அண்மையில்தெற்குமற்றும் தெற்காசியப் பிராந்தியங்களில் இயற்கை பேரிடர்ங்களினால் ஏற்பட்ட பேரழிவுகள் தொடர்பில்ஜக்கியநாடுகள்சபையின்செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரெஸ் அவரது உத்தியோகபூர்வ 'எக்ஸ்' தளப்பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கிறார்.

இலங்கை, இந்தோனேசியா, தாய்லாந்து மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் ஏற்பட்ட மிகமோசமான வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு ஆகியவற்றில் சிக்கி பெருமளவானோர் உயிரிழந்திருப்பது குறித்து மிகுந்த கவலையடைவதாக அவர் அப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று இவ்வனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சகல குடும்பங்களுக்கும் தனது ஆழ்ந்த அனுதாபத்தை வெளிப்படுத்தியுள்ள அவர், தாம் பாதிக்கப்பட்டோருடன் தோளோடு தோள் நிற்பதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்நாடுகளின் உதவிப் பணிகள் மற்றும் மீளக்கட்டியெழுப்பல் முயற்சிகளுக்கு முழுமையான ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாகவும் ஐ.நா செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரெஸ் அவரது எக்ஸ் தளப்பதிவில் உறுதியளித்துள்ளார்.

# 1,500 பேருந்து சேவைகள் பேரிடரால் இடைநிறுத்தம்

'தித்வா' சூறாவளியால் ஏற்பட்ட பேரிடர் நிலைமை காரணமாக சாலைத் தடைகள் ஏற்பட்டதினால், இலங்கை போக்குவரத்து சபையினால் இயக்கப்படும் சுமார் 1500 பேருந்துசேவைகள்இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பேருந்துகளில் சுமார் 15 ஆயிரம் பயணிகள் முன்னதாக ஆசனங்களை முன்பதிவு செய்திருந்தனர் என்று இ.போ.ச. பேருந்துகளுக்கான ஆசன முன்பதிவு நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஆசனமுன்பதிவுசேவையைகையாளும் நிறுவனம், ஆசனங்களை முன்பதிவு செய்த பயணிகள் தங்களுக்கு விருப்பமான வேறு எந்த ஒருநாளுக்கும் தங்கள் முன்பதிவுகளை மீளமைத்துக் கொள்ள முடியும் என்று அறிவித்துள்ளது.

மாற்று நாளைப் பெற்றுக்கொள்ள பயணிகள் 1315 என்ற அவசர தொலைபேசி இலக்கம் அல்லது 070 3110 506 ஊடாகத் தொடர்பு கொள்ளலாம். மீளமைப்பிற்கு மேலதிககட்டணங்கள்எதுவும்அறவிடப்படாது என்றும் இ.போ.ச. குறிப்பிட்டுள்ளது.

தற்போது, நுவரெலியா, நாவலப்பிட்டி, யாழ்ப்பாணத்திற்கான 87 ஆம் இலக்கப் பாதை, வலப்பனை, மூதூர் போன்ற இடங்களுக்கான பேருந்து சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இருப்பினும், மற்ற இடங்களுக்கான சேவைகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன. மேலும் அந்தப் பாதைகளுக்கான ஆசன முன்பதிவுகளும் மீண்டும் கிடைக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மீண்டெழு தேசிய வேலைத் திட்டமும் புதிய வரவு செலவுத் திட்டமும் தேவை

## நாமல் ராஜபக்ச தெரிவிப்பு

ஆளும்தரப்பு தற்போது சமர்ப்பித்துள்ள வரவு செலவு திட்டத்தின் மூலம் நாட்டை மீளக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முடியாது. அதனால் தேசிய வேலைத் திட்டம் ஒன்றைத் தயாரித்து புதிய வரவு செலவு திட்டம் ஒன்றை சமர்ப்பிக்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கும் என நம்புகிறோம் என ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு, வர்த்தக வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு மற்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுகளுக்கான நிதிஒதுக்கீடுகள் மீதானகுழுநிலைவிவாதத்தில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் ஏற்பட்டுள்ள பேரிடர்ங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது அனுதாபத்தை கூறிக்கொள்கின்றேன். இந்த பேரிடர்ங்களுக்கு 15 இலட்சம் வரையிலானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நேரத்தில் ஆளும்தரப்பு தற்போது சமர்ப்பித்துள்ளவரவுசெலவுத்திட்டத்தில்நாட்டை முன்னெடுத்துச் செல்ல முடியுமா என்பது சிக்கலானது. பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீட்பதற்கு மேலதிகமாக நிதி செலவிட வேண்டும். இதனால் இந்த நேரத்தில் வேலை செய்யக்கூடியவாறு வரவு செலவுத்திட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். அதேபோன்று இந்த நிலைமையில் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுடன் செல்லவும் முடியாது. இது தொடர்பிலும் அவதானத்தை செலுத்துமாறு கோருகின்றோம்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதனை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அந்த வேலைத்திட்டங்களை தற்போது சமர்ப்பித்துள்ள வரவு செலவு திட்டத்துடன் மேற்நகொள்ள முடியுமா என்ற பிரச்சினை இருக்கிறது. அதனாலே இந்த வரவு செலவு திட்ட அறிக்கையை தேசிய வேலைத்திட்டதுடன் தொடர்புபடுத்தியவாறு மீள் மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கிறோம்.

கிராமங்களில் மக்கள் பெரும் அழுத்தங்களுடன் இருக்கின்றனர். உயிர்களை இழந்தும், சொத்துக்களை இழந்தும் இருக்கின்றனர். இந்த நேரத்தில் சுகாதார துறையினர் மற்றும் இராணுவத்தினர் பெரும் சேவைகளை செய்துவருகின்றனர். இவர்கள் தொடர்பில் ஆளும்தரப்பு அவதானம் செலுத்த வேண்டும்.

அத்துடன் இந்த பேரிடர் நிலையை முன்கூட்டி அறிந்து, அதனை கட்டுப்படுத்த ஆளும்தரப்பு தவறியதாக குற்றச்சாட்டு தெரிவிக்கப்படும், அதேநேரம் அதிகாரிகள் இதுதொடர்பில் செயற்பட தவறி இருப்பதாக அரசாங்கத்தில் இருக்கும் சிலர் குற்றச்சாட்டு தெரிவிக்கின்றனர். அதனால் இதுதொடர்பில் தேடிப்பார்க்க நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைத்து விசாரணை மேற்கொள்ள வேண்டும். அந்த தெரிவுக்குழு திருடனின் தாயிடம் சாத்திரம் கேட்பதுபோல் அல்லாமல் வெளிப்படையான, சுயாதீன தெரிவுக்குழுவொன்றை நியமிக்க வேண்டும் – என்றார்.

# இடம்பெயர்ந்த மக்களின் வாழ்வை மீளக் கட்டியெழுப்ப ஆதரவு நிச்சயம்

## பிரதமர் ஹரினி நாடாளுமன்றில் தெரிவிப்பு

பேரிடர் காரணமாக இடம்பெயர்ந்த அனைத்து மக்களும் தங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப அனைத்து சாத்தியமான ஆதரவுகளையும் வழங்வோம் என பிரதமர் கலாநிதி ஹரிணி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பெருந்தோட்டத்துறை, சமூக உட்கட்டமைப்பு அமைச்சு, வர்த்தகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரலாற்றில் மிக மோசமான பேரழிவுகளில் ஒன்றை நாம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. முதலாவதாக, இந்த பேரழிவால் உயிர் இழந்த, இடம்பெயர்ந்த, சொத்து சேதத்தை சந்தித்த மற்றும் பல்வேறு வழிகளில் பாதிக்கப்பட்ட அணைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த பேரிடரால் வீடுகள், தொழில்கள் மற்றும் சொத்துக்களை இழந்து இடம்பெயர்ந்த அனைத்து மக்களுக்கும் தங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப ஒரு அரசாங்கமாக நாங்கள் அனைத்து ஆதரவையும் வழங்குவோம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும்,கடந்த சில நாட்களாக, குறிப்பாக, நமது நாட்டின் அரச அதிகாரிகள் மற்றும் பொது பிரதிநிதிகள் பாதிக்கப்பட்ட நமது சொந்த சகோதர மக்களை மீட்டு அவர்களுக்கு நிவாரணம் வழங்க பெரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.அரச அதிகாரிகளுடன் சேர்ந்து, இந்தப் பணியை மேற்கொண்ட அனைத்து பொது பிரதிநிதிகளுக்கும் (அரசாங்கக் கட்சிகள் மற்றும் எதிர்க்கட்சிகள்) எனது சிறப்பு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக இந்த சவாலை எதிர்கொள்வதில், நமது மக்களிடையே ஒற்றுமை, தைரியம், கருணை, இரக்கம் மற்றும் பரஸ்பர உதவி ஆகியவற்றைக் கண்டோம். இந்த பணியை முன்னெடுத்துச் செல்ல இது எங்களுக்கு இன்னும் பலத்தை அளிக்கிறது.

இந்துப் பேரிடரில் ஆபத்தில் இருந்த நமது சகோதர சகோதரிகளை மீட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்ல அயராது உழைத்த இலங்கை இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸார் மற்றும் பிற அரசு அதிகாரிகள் மற்றும் அனைத்து அவசரகால நிவாரணக் குழுக்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.அவர்களுக்கு கௌரவமளிக்கிறேன்.

மற்றவர்களின் உயிரைக் காப்பாற்ற அவர்கள் தங்கள் உயிரைத் தியாகம் செய்த நிகழ்வுகளும் உள்ளன. இது எளிதில் காண முடியாத ஒரு வீரம். அவர்கள் அனைவரையும் நான் மீண்டும் மீண்டும் மரியாதையுடன் நினைவுகூருகிறேன். மீட்பு நடவடிக்கையின்போது வென்னப்புவ, லுனுவில, ஜின் ஓயாவில் விபத்துக்குள்ளான இலங்கை விமானப்படை பெல் 212 ஹெலிகாப்டரின் விமானி விங் கமாண்டர் நிர்மல சியம்பலாபிட்டியவிற்கும், வெள்ளத்தைக் கட்டுப்படுத்த கண்டிக்குளம் பகுதியில் உள்ள முகத்துவாரத்தை அகலப்படுத்தும்போது காணாமல் போன ஐந்து கடற்படை அதிகாரிகளுக்கும் எனது மரியாதையைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்ற அவர்கள் வெளிப்படுத்திய வீரத்தை ஒருபோதும் மறக்க முடியாது.

மேலும்,ஆளுநர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலர்கள், உள்ளூராட்சி அதிகாரிகள் மற்றும் அத்தியாவசிய சேவை வழங்குநர்களும் இந்த கடினமான நேரத்தில் நேரடியாக களத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களின் சேவையும் குறிப்பாக பாராட்டத்தக்கது.

இந்த நேரத்தில் பல்வேறு வழிகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ முன்வரும் தன்னார்வக் குழுக்கள்,இளைஞர் குழுக்கள்,மகளிர் குழுக்கள், பல்வேறு இளைஞர் குழுக்கள் மற்றும் அமைப்புகள், மத நிறுவனங்கள் ஆகியவற்றையும் நான் குறிப்பாகக் குறிப்பிட வேண்டும். இவர்கள் அனைவரும் எந்த லாபத்தையும் கருத்தில் கொள்ளாமல் பாதிக்கப்பட்டவர்களுக்கு பங்களிக்கின்றனர். அவர்கள் பல நாட்களாக இந்த நடவடிக்கைக்காக அர்ப்பணிப்புடன் உழைத்து வருகின்றனர். ஒரு நாடாக, ஒரு இலங்கை தேசமாக, நமக்கு இருக்கும் மிகவும் மதிப்புமிக்க பலம் இந்த மனிதநேயத்தை அறிந்த, மற்றவர்களிடம்




இரக்கமுள்ள நமது மனித இதயங்கள்தான். இந்த நேரத்தில் அவர்கள் அனைவருக்கும் எனது மரியாதையைச் செலுத்துகிறேன்.

மேலும், இந்த சவாலான நேரத்தில் நம்முடன் இணைந்து,நமக்கு பலமாக இருந்த நமது நட்பு வெளிநாடுகளை நான் குறிப்பாக நினைவுகூர விரும்புகிறேன். பல்வேறு வழிகளில் நமக்கு உதவிய, நமது தேவைகளைக்கவனித்த, தேவையானநிவாரண சேவைகளை வழங்க இராஜதந்திர மட்டத்தில் தலையிட்ட அனைத்து வெளிநாடுகளுக்கும், வெளிநாட்டு தூதரகத் தலைவர்கள் மற்றும் அந்த நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகளுக்கும் நான் நன்றி கூறுகிறேன். இலங்கையர்களுக்கு பல்வேறு வழிகளில் உதவ முன்வந்துள்ள பல சர்வதேச அமைப்புகளின் இருப்பும் இந்த நேரத்தில் எங்களுக்கு பலத்தை அளிக்கிறது. அவர்களை நான் குறிப்பாக நினைவில் கொள்கிறேன்.

மேலும், வெளிநாடுகளில் பணிபுரியும் மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் மற்றும் அவர்களின் பல்வேறு அமைப்புகள். இந்த நேரத்தில் தங்கள் தாய்நாட்டிற்கு ஏற்பட்டுள்ள பேரழிவைக் கண்டு,இந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்பவும்,பாதிக்கப்பட்டவர்கள் மீண்டும் முன்னேற உதவவும் அவர்கள் தங்களால் இயன்ற அனைத்தையும் செய்கிறார்கள். உலகில் எங்கிருந்தாலும், இலங்கை சகோதர மக்களுக்கு ஏற்பட்ட துயரங்களுக்கு மத்தியில் அவர்களின் தலையீடு, அர்ப்பணிப்பு மற்றும் ஆதரவுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# மக்களின் நம்பிக்கையை தக்கவைக்க அநுர மட்டுமாவது தோற்றுவிடக்கூடாது

## ஐதேக பொதுச் செயலாளர் தெரிவிப்பு

ஆளும்தரப்பின் 159 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தோல்வியடைந்தாலும், அரசுத் தலைவர் அநுரகுமார தோல்வியடைந்து விடக்கூடாது. அவர் தோல்வியடையும் பட்சத்தில் அரசியல் மீதான பொதுமக்களின் நம்பிக்கை பூச்சிய நிலையை அடைந்துவிடும் என ஐக்கிய தேசிய கட்சியின் பிரதி பொதுச் செயலாளர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வீடுகளைச் சுத்தம் செய்வதில் கவனம் செலுத்துவதற்காக, கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவை சுத்தம் செய்வதற்கான திட்டங்கள் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளன. நாட்டின்பிரச்சினைநாம்நினைத்ததைவிட மிகவும் ஆழமானதாகவுள்ளது. எனவே இப்போதைக்கு கிறுஸ்துமஸ் நிகழ்வுகளும் ஒத்திவைக்கப்படுகின்றன.

தேவையற்ற செலவுகளைக் குறைத்து அவசர காலச் சூழ்நிலையில் மக்களுக்கு உதவுவதற்குத்தயாராகஇருக்கின்றோம். தேசிய நெருக்கடி நேரத்தில் சமூக ஊடகங்களுக்கு எதிராக அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்துமாறு சுனில் வட்டகல முன்வைத்த ஆலோசனையை கடுமையாக விமர்சிக்கின்றோம். அது ஆளும்தரப்பின் 159 நாடாளுமன்ற உறுப்பினர்களதும் தோல்வி என்பதற்கான சான்றாகும்.

அனைத்து அரசியல்வாதிகளும் இந்த முக்கியமான தருணத்தில் பிளவுபட்டு சண்டையிடுவதை நிறுத்திவிட்டு, அனைவரும் ஒன்றிணைந்தால் பொதுமக்களும் ஒற்றுமையுடன் மீண்டெழுவர். நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்காக முன்னாள் அரசுத் தலைவர்களான ரணில் விக்கிரமசிங்க மற்றும் மஹிந்த ராஜபக்ச ஆகியோரும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்தச்சந்தர்ப்பத்தில் ஆளும்தரப்பின் 159 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தோல்வியடைந்தாலும், அரசுத் தலைவர் அநுரகுமார தோல்வியடைந்து விடக்கூடாது. அவர் தோல்வியடையும் பட்சத்தில் அரசியல் மீதான பொதுமக்களின் நம்பிக்கை பூச்சிய நிலையை அடைந்துவிடும். வாக்களித்த மக்களின் நம்பிக்கையைக் காப்பாற்றுவதற்காகவேனும் அநுர தோல்வியடைந்து விடக்கூடாது - என்றார்.

# ‘இலங்கையர்களின் முன்னுதாரணம்’ அமெரிக்கத் தூதர் ஜூலி பாராட்டு

தற்போதைய பேரிடர் சூழ்நிலையில் இலங்கையர்கள் தமது அயலவர்களுக்கும், ஏனைய சமூகங்களுக்கும் தன்னார்வ அடிப்படையில் உதவுவதுடன், தம்மால் இயன்றவாறு சிறிய மற்றும் பெரியளவிலானநன்கொடைகளையும் வழங்கிவருவது மிகச்சிறந்த முன்னுதாரணமாகஅமைந்திருப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டோருக்காகஇலங்கை மக்கள் ஒன்றாக இணைந்து தம்மால் இயன்ற பல்வேறு வழிகளிலும் உதவிகளைவழங்கிவருவது பலரையும் நெகிழச்செய்துள்ளது என்று தனது எக்ஸ்தளப்பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங், தெரிவித்துள்ளார்.

‘இலங்கையில் நிலவும் தற்போதைய பேரிடர் சூழ்நிலையில் ஆளும்தரப்பு மாத்திரம் உதவவில்லை. மாறாக இலங்கையர்கள் தமது அயலவர்களுக்கும், ஏனைய சமூகங்களுக்கும் தன்னார்வ அடிப்படையில் உதவுவதுடன், தம்மால் இயன்றவாறு சிறிய மற்றும் பெரியளவிலானநன்கொடைகளையும் வழங்கிவருவது மிகச்சிறந்த முன்னுதாரணமாக அமைந்திருக்கிறது’ எனத் தெரிவித்துள்ளார்.

# எதிர்க் கட்சிகளின் எம்.பிக்கள் சிலர் கீழ்த்தர அரசியல் செய்கின்றனர்

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க கொந்தளிப்பு

இயற்கைப் பேரிடரைத் தொடர்ந்து நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சியின் ஒரு சில உறுப்பினர்கள் கீழ்த்தரமான அரசியல் இலாபத்துக்காக செயற்படுகிறார்கள். ஆளும்தரப்பை நெருக்கடிக்குள்ளாக்க முயற்சிக்கிறார்கள். ஏற்பட்ட பேரிடர் நிலையின் பாதிப்பில் இருந்து வெகுவிரைவில் மீண்டெழுவோம்.ஆளும்தரப்பை வீழ்த்த முடியாது.மக்கள் எம்முடன் உள்ளார்கள் என சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பெருந்தோட்டத்துறை, சமூக உட்கட்டமைப்பு அமைச்சு, வர்த்தகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதி , திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் ஏற்பட்டுள்ள பேரிடர் நிலமையில் நாங்கள் சில அடிப்படை ரீதியிலான திட்டங்களை முன்னெடுக்கின்றோம். அவசர முன்னுரிமை, தற்காலிகத் தீர்வு மற்றும் நிரந்தரத் தீர்வு என்று விடயங்களாக அவற்றை முன்னெடுக்கவுள்ளோம்.அதன்படி அவசர நிலமை மற்றும் தற்காலிக தீர்வுகள் தொடர்பிலேயே முதல்கட்டமாக நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றோம். நாட்டை மீளக் கட்டியெழுப்புதல் என்பது நிரந்தர தீர்வாக இருக்கும்.

பேரிடரில் பாதிக்கப்பட்ட பல பிரதேசங்கள் இருக்கின்றன. இந்நிலையில் வடக்கு மாகாணத்தை எடுத்துக்கொண்டால் யாழ். மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் பாதிப்புகள் அங்கு மிகவும் குறைவாகும். கிளிநொச்சியில் சில பிரதேசங்களில் பாதிப்புகள் ஏற்பட்டிருந்தன. வவுனியாவில் சில பிரதேசங்களும் பாதிக்கப்பட்டன. ஆனால் மன்னார் மற்றும் முல்லைத்தீவு அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு நாயாறு பாலம் சேதமடைந்துள்ளது. டிசம்பர் 15க்கு முன்னர் அதனை சீரமைக்கும் பணிகளை முன்னெடுப்போம். எமது தன்னார்வ குழு உள்ளிட்ட சகல தரப்பினரும் வடக்கில் சுத்தம் செய்யும் பணிகளில் ஈடுபடுகின்றனர்.

ஆளும்தரப்பு அவசர வேலைத் திட்டத்தில் பல்வேறுநடவடிக்கைகளைத்தொடங்கியுள்ளது. வீடுகளை சுத்தம் செய்வதற்காக 25,000 ரூபா கொடுப்பனவு வழங்குகின்றது. பாதிக்கப்பட்ட பாடசாலைமாணவர்களுக்கும்25,000ரூபாவை வழங்கநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மக்கள் எப்போதும் முகாம்களில் தங்கியிருப்பதற்கு விரும்புவதில்லை. கட்டட ஆய்வு குழுவினர் அவர்கள்வீடுகளுக்குதிரும்பமுடியும்என்பதனை உறுதிப்படுத்த வேண்டும்.

தற்போதைய நிலமையில் போக்குவரத்து, வீதிகள் மற்றும் தொலைத்தொடர்புகளை உறுதிப்படுத்த வேண்டும். அதற்கு தேவையான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. தற்போது இலங்கை போக்குவரத்து சேவைகள் மீள ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன.

நாங்கள் முறையாக வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்றோம்.கஸ்டமானவிடயங்களை முன்னெடுக்கின்றோம். எங்கள் முன்னால் எவரும்சரியானவராக அன்றி மக்கள் முன்னால் சரியானவர்களாக இருக்க வேண்டும். உள்ளூராட்சி தலைவர்கள் எங்களுக்கு நன்றாக உதவுகின்றனர். வடக்கிலும் பிரதேச சபை தலைவர்கள் உதவுகின்றனர். இந்தச் சவாலை எங்களால் வெற்றிக்கொள்ள முடியும்.

இயற்கைப் பேரிடரைத் தொடர்ந்து நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்துள்ள சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சியின் ஒருசில உறுப்பினர்கள் கீழ்த்தரமான அரசியல் இலாபத்துக்காக செயற்படுகிறார்கள். ஆளும்தரப்பை நெருக்கடிக்குள்ளாக்க முயற்சிக்கிறார்கள். ஏற்பட்ட பேரிடர் நிலையின் பாதிப்பில் இருந்து வெகுவிரைவில் மீண்டெழுவோம். ஆளும்தரப்பை வீழ்த்த முடியாது. மக்கள் எம்முடன் உள்ளார்கள் - என்றார்.

# முன்னெச்சரிக்கை விட்டிருந்தால் ஆதாரங்களை முன்வையுங்கள்

## எதிர்க் கட்சிகளுக்கு அமைச்சர் நளிந்த சவால்

பேரிடருக்கு உள்ளாகி மக்கள் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கையில், மீட்பு பணியினர் உயிர்களை காப்பாற்ற போராடிக் கொண்டிருக்கையில் எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் இந்த பேரிடர் பற்றி நவம்பர் 12 ஆம் திகதி முன்கூட்டியதாகவே அறிவிக்கப்பட்டது, ஆளும்தரப்பு அதனை கவனத்திற் கொள்ளவில்லை என்று குறிப்பிட்டுக் கொள்கிறார்கள். வானிலைஆராய்ச்சிநிறுவனம்உட்பட ஏதேனும் அரச நிறுவனங்கள் நவம்பர் 12 ஆம் முன்னெச்சரிக்கை அறிக்கை எதனையும் வெளியிட்டிருந்தால் எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் எவரேனும் அதனை சபைக்கு சமர்ப்பிக்கலாம்எனசுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பெருந்தோட்டத்துறை, சமூக உட்கட்டமைப்பு அமைச்சு, வர்த்தகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதி , திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுனாமியைக் காட்டிலும் மிக மோசமான இழப்பை நாடு தற்போது எதிர்கொண்டுள்ளது. பெரும் போராட்டத்துக்குப் பின்னர் நாடு தற்போது சற்று இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது. இலங்கையின் தற்போதைய நிலவரம் குறித்து ஐக்கிய நாடுகள் சபை விசேட அறிக்கை வெளியிட்டுள்ளது. ஆளும்தரப்பு ஏதும் செய்யவில்லை என்று அரசியல் இலாபம் தேடும் எதிர்க்கட்சியினர் இந்த அறிக்கையை பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பேரிடருக்கு உள்ளாகி மக்கள் உயிருக்கு போராகக் கொண்டிருக்கையில்,மீட்புப்பணியினர் உயிர்களை காப்பாற்ற போராடிக் கொண்டிருக்கையில் எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் இந்த பேரிடர் பற்றி நவம்பர் 12 ஆம் திகதி முன்கூட்டியதாகவே அறிவிக்கப்பட்டது,ஆளும்தரப்பு அதனை கவனத்திற் கொள்ளவில்லை என்று குறிப்பிட்டுக் கொள்கிறார்கள்.

வானிலை ஆராய்ச்சி நிறுவனம் உட்பட ஏதேனும் அரச நிறுவனங்கள் நவம்பர்12 முன்னெச்சரிக்கைஅறிக்கை எதனையும் வெளியிட்டிருந்தால் எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் எவரேனும் அதனை சபைக்கு சமர்ப்பிக்கலாம். வானிலை ஆராய்ச்சி நிலையத்திடமோ அல்லது ஆளும்தரப்பிடமோ இல்லாத உத்தியோகபூர்வ அறிக்கையை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவோ, நாமல் ராஜபக்சவோ அல்லது தயாசிறி ஜயசேகரவோ பகிரங்கப்படுத்தலாம். மக்களும் உண்மையை விளங்கிக் கொள்ளலாம்.

காலநிலை அவதானிப்பு மத்திய நிலையம் நவம்பர் மாதம் 12 வரை மழையுடனான காலநிலை, இடயுடனான காலநிலை, அவ்வப்போது வரும் என்றே அறிக்கை வெளியிட்டுள்ளது. நவம்பர் 6, 75 முதல் 100 மில்லி மீற்றர் அளவில் கடுமையான மழை பெய்யக்கூடும் என்று குறிப்பிட்டுள்ளது. இவர்கள் குறிப்பிடுவதை போன்று வானிலை ஆராய்ச்சி நிலையம் எவ்வித அறிக்கைகளையும்உத்தியோகபூர்வமாக வெளியிடவில்லை.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.12.2025இல் வெளியிடப்பெற்றது